வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 04.04.2022 திங்கட்கிழமை இதழ் : 120 பக்கங்கள் : 16



# அனைத்து அமைச்சர்களும் நேற்று இரவு இராஜினாமா!

## பிரதமர் மஹிந்த தலைமையிலான விசேட கூட்டத்தின் பின் தீர்மானம்

கொழும்பு, ஏப்ரல் 04

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி நிலை உச்ச மடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் முழு அமைச்சர்களும் இராஜினாமா செய்துள்ளனர். ஆயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியில் நீடிக்கிறார். 15

# இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் பச்சைக்கொடி!

## விமல் வீரவன்ஸ தகவல்



கொழும்பு, ஏப். 05

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்காக நாட்டில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி 15

# செய்தியாளர்களை கைது செய்ய யாழ்ப்பாண பொலிஸார் உத்தரவு

## கொக்குவிலில் நேற்று பதற்றநிலை

யாழ்ப்பாணம், ஏப். 04

செய்தியாளர்களை கைது செய்து வாகனத்தில் ஏற்று மாறு யாழ். மாவட்ட பொலிஸின் உதவி அத்தியட்சகர் பணித்தமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் முன்பாக நேற்று 15

# சஜித் தலைமையில் கொழும்பில் எதிரணியினர் நேற்று போராட்டம்

## பொலிஸாருடன் கடும் முறுகல்

கொழும்பு, ஏப். 04

ஊரடங்குச் சட்டம் நேற்று அமுலில் இருந்தவேளை கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அரசுக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோ கோம் கோட்டா (#GoHomeGota) என்ற கோஷத்தை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்கட்சியினர் கொழும்பு 15



# வாசுதேவ தரப்பு தனி வழி!



கொழும்பு, ஏப். 04

பாராளுமன்றில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தான் உள்ளிட்ட குழுவினர் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரி வித்தார்.

விசேட அறிக்கை 15



# பேராதனை பல்கலை மாணவர் மீது பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதல்!

கொழும்பு, ஏப். 04

ஊரடங்குச் சட்டம் நேற்று நடைமுறையில் இருந்தபோதும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் தலையில் சிவப்புத் துணி கட்டி போராட்டத்தில் 15

# மஹிந்த பதவி விலகவில்லை!



## பிரதமர் அலுவலகம் அறிக்கை

கொழும்பு, ஏப். 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகவுள்ளார் என வெளியாகிய செய்தியில் உண்மையில்லை என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

தென்னிலங்கையின் பிரபல ஊடகம் ஒன்று, தனது செய்தியில் பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ விலக 15

# மஹிந்த பதவி விலகும் செய்தியால் கொழும்பில் நேற்று பெரும் பரபரப்பு

கொழும்பு, ஏப். 04

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகுகிறார் என நேற்று மாலை இணைய ஊடகங்களில் வெளியாகிய செய்திகளால் கொழும்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நாட்டில் எழுந்துள்ள பெரும் நெருக்கடி நிலையை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகுகிறார் எனவும் அவர் தனது பதவி வில கல் கடிதத்தை ஜனா 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

விலைவாசி அதிகரிப்பு என்பது உலகம் எங்கும் இருப்பது தான். கடந்த ஆண்டு வாங்கிய விலையில் இந்த ஆண்டும் அதேபொருளை அதேவிலையில் வாங்குவதென்பது உலகில் எந்த நாட்டிலும் நடப்பதில்லை. அரிதாக எங்காவது ஒருசில இடங்களில் நடக்கலாம்.

நமது நாட்டிலும் பொருட்களின் விலையேற்றம் என்பது இருந்துகொண்டுதான் இருக்கின்றது.

ஆனால், அதற்கேற்ப வருமானமும் சிறிதாக அதிகரிக் கவே செய்யும். கடந்த ஆண்டு ஒரு தினக்கூலி ஆயிரத்து ஐநூறாக இருந்தது, இப்போது இரண்டாயிரமாகலாம்.

அதுபோலவே, விலையேற்றங்களுக்கு ஏற்ப வருமானம் அதிகரிக்காவிட்டாலும் சிறிய மாற்றமாவது இருக்கும்.

ஆனால், இப்போது நமது நாட்டில் விலையேற்றம் என்பது சில பொருட்களுக்கு நூறு வீதத்திற்கும் அதிகமான அளவில் எகிறிவிட்டது.

அத்தியாவசிய பொருட்களையும் இறக்குமதி செய்யும் நமது நாட்டில், பொருட்களை இறக்குமதி செய்ய வெளி நாட்டு நாணய இருப்பு இல்லாதது வேறு விடயம். ஆனால், எரிபொருளுக்கு மாத்திரமன்றி, அத்தியாவசிய பொருட்களான அரிசி, சீனி, பருப்பு, கிழங்கு, சமையல் எண்ணெய் என்று அனைத்தையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் நமக்கு, இவற்றை வாங்கு வதற்கு டொலர் தேவை. அது இல்லையென்பதால் இறக்கு மதி செய்யமுடியாத நிலை. இப்போது அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவும் சீனாவும் கடன்களை கொடுத்திருக்கின்றன. கடன்கள் என்றால் அது டொலரில் கிடைக்கின்றது. பொருட்களின் விலையும் டொலர் பெறுமதியை பொறுத்தே அமையும்.

இருநூறு ரூபாயாக இருந்த ஒரு டொலரின் பெறுமதி இன்று முன்னூறு ரூபாய் ஆகியிருக்கின்றது. ரூபாயின் மதிப்பு இன்னும் குறைந்து, டொலருக்கு எதிராக முன்னூ ற்றி ஐம்பது ரூபாயாக அதிகரிக்கலாம் என்றே ஊகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

டொலரின் பெருமதி இருநூறாக இருந்தபோது ஒரு கிலோ சீனியை ஒரு டொலருக்கு வாங்கிக்கொண்டு வந்தி ருந்தால், அதன் கொள்முதல் விலை இருநூறு ரூபாயுடன் போக்குவரத்து செலவையும் சேர்த்து இருநூற்று ஐம்பது ஆகியிருக்கும். ஆனால், இப்போது அதன் கொள்வனவு பெறுமதி நானூறாகி விட்டது.

இப்படியே, இறக்குமதி செய்யப்படும் எல்லா பொருட்க ளினதும் விலைகளும் பல மடங்கு உயர்ந்துவிட்டன.

இதுகுறித்து பேசுகின்ற வடக்கின் மக்கள், நாங்கள் கொழும்பில் நூறு ரூபாய்க்கு பெற்றோல் விற்றபோது யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து ஐநூறுக்கு வாங்கி வாழ்க் கையை நடத்தியவர்கள், பொருளாதார தடை என்பது எங்கள் வாழ்நாளில் அரைவாசிப்பகுதியில் அமுலில் இருந்தது என்று சொல்வதை பரவலாக கேட்கமுடிந்தது.

இன்று உலகம் எங்கும் பொருட்களின் விலையேற்றம் என்பது பொதுவான பேசுபொருளாகியிருந்தாலும், மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் அளவுக்கு வந்துவிடவில்லை, அல்லது வந்துவிடாது என்றே இந்த ஊர்க்குருவி நம்பிக்கொண்டிருந்தது.

ஆனால், அந்தச் செய்தியை கேட்டபோது அதிர்ச்சியாக இருந்தது.

அவர் ஒரு கல்லூரியில் ஆசிரியையாக இருப்பவர், அவர் சொன்ன அந்த தகவலை நம்பவும் முடியவில்லை. ஆனால், நம்பாமலும் இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்லூரியில் மாணவர்கள் கொண்டுவருகின்ற சாப்பாட்டு பார்சல்கள் திருட்டுப்போவது வழக்கமாகியிருந்ததாம். இது எப்படி நடக்கின்றது என்பதை அறிந்துகொள்வதற்காக ஒருநாள், மாணவர்கள் காலையில் பிரார்த்தனை செய்வதற்காக கல் லூரியிலுள்ள உள் விளையாட்டரங்கில் கூடியிருந்தபோது, இவர் தனது வகுப்புக்கு சென்றிருக்கிறார்.

இவரைக் கண்டதும் ஒன்பது மாணவர்கள் அவர் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டிருக்கின்றனர். அவர்கள் தமது வீடுகளிலிருந்து சாப்பாடு கொண்டுவர முடியாத நிலையில், கல்லூரியில் பிரார்த்தனை நடை பெற்ற நேரத்தில் மற்றைய வகுப்பறைகளில் நுழைந்து மாணவர்களின் சாப்பாட்டுப் பார்சல்களை திருடி சாப் பிட்டுவந்தது அப்போதுதான் அந்த ஆசிரியைக்கு தெரியவந்தது.

இந்தத் தகவலையே நம்பமுடியவில்லை என்று சொல்லியிருந்தேன். ஆனால், நம்பித்தான் ஆகவேண்டும்.

யாழ்ப்பாண நகரத்தில், குறிப்பாக நடுத்தர வகுப்பினர் கல்வி கற்கும் கல்லூரி ஒன்றிலேயே இந்த நிலை என்றால், சாதாரண கிராமங்களின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை ஊகிக்க அதிக நேரம் தேவையில்லை.

இது நமது நாட்டின் தற்போதைய நிலைக்கு ஒரு சான்று. என்ன செய்யப்போகின்றோம் நாம்?

கேட்காமலும் இருக்கமுடியவில்லை!

- ஊர்க்குருவி

## ஊரடங்கால் வெறிச்சோடியது யாழ். நகரம்!



நாடு முழுவதும் இன்று காலை வரை நடைமுறையிலிருந்த ஊரடங்கால் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நகரம் முழுமையாக முடங்கியது. ஊரடங்கை மீறிப் பயணித்தவர்கள் பொலி ஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# மீண்டுமொரு கறுப்பு ஜூலையை ஏற்படுத்த ஆளும் தரப்பு முயற்சி!

### கலாநிதி தயான் ஜயதிலக சாடல்

கொழும்பு, ஏப். 04

பொருளாதார நெருக்கடி யால் அன்றாட வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது கிளர்ந்து எழுந்துள்ள மக்களின் போராட்டங்களுக்கு அடிப் படைவாத சாயத்தைப் பூசி நாட்டில் மீண்டும் கறுப்பு ஜூ லையை ஏற்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின் றார்களா என்று கலாநிதி தயான் ஜயதிலக கேள்வி எழுப் பியுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு அவசரகால நிலைமையை அமுலாக்குவதன் மூலம் தீர்வை எட்டிவிடலாம் என்று ஆட்சியாளர்கள் கருது வது பொருத்தமற்றதோர் அணுகுமுறையாகும். நாட்டில் அமுலாக்கப்பட்டுள்ள அவ சரகால நிலை மற்றும் பொருளாதார நெருக்கடியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பொரு ளாதார நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளன. மக்கள் அன்றாடம் தமது வாழ்க் கையை கொண்டு நகர்த்த முடியாது திண்டாடி வருகின் றார்கள். ஆட்சியாளர்களால் அதற்கான தீர்வுகளைக் காண முடியவில்லை. இதனால் கோபமடைந்துள்ள மக்கள் கிளர்ந்து எழுந்து மிரிஹான வில் உள்ள ஜனாதிபதியின் வீட்டை முற்றுகை இட்டி ருந்தனர். இதேநேரம் நாட ளாவிய ரீதியிலும் போராட் டங்களை முன்னெடுக்கின் றார்கள்.

அவ்வாறான நிலையில் மிரிஹான போராட்டத்தை ஜனாதிபதி ஊடகப்பிரிவு அடிப்படைவாதிகளின் போராட்டமாக காண்பித்துள் ளது. இந்த நாட்டில் அடிப் படைவாதம் பற்றி பேசப்படு கின்றது என்றால் ஒரே இரவில் இயற்கை உரத்தைப் பயன்ப டுத்த வேண்டும் இரசாயன உரத்தை பயன்படுத்தக்கூடாது என்று தீர்மானம் எடுத்து அறிவித்த ஆட்சியாளர்கள் அடிப்படைவாதிகள் இல்லாயா என்ற கேள்வி எழுகின்றது.



ஆகவே, ஆட்சியாளர்க ளுக்கு அடிப்படைவாதம் பற்றி பேசுவதற்கு அருகதையில்லை. மக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது போராடுகின்றார்கள். அதற்கான தீர்வை வழங்கும் வரையில் போராட்டங்கள் தொடரத்தான் போகின்றன. மக்கள் போராட்டங்களை அடக்குவதற்கு அவசரகால நிலையை பிரகனடப்படுத் துவது பொருத்தமற்ற அணுகு முறையாகும்.

இதேநேரம், 1983 இல் கறுப்பு ஜூலை கலவரங்களில் ஈடுபட்டவர்கள் பின்னர் தம்மை நியாயப்படுத்துவதற்கு ஜே. வி. பி.மீது பழியைப் போடுவதற்கு முனைந்தார்கள். அதேபோன்றுதான் தற்போதும் மீண்டுமொரு கறுப்பு ஜூலைக்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின் றார்கள் போன்றுள்ளது. மிரிஹான போராட்டத்தின் பின்னால் ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி இருக்கின்றன என்றும் ஏனைய போராட்டங்களை அவை தூண்டுகின்றன என்றும் ஆளும் தரப்பினர் குற்றம் சாட் டுகின்றார்கள் - என்றார். (ஐ)

# 7 மணிநேர மின்வெட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டது!

### ஆனாலும் 5 - 6 மணிநேர மின்வெட்டு

கொழும்பு, ஏப். 04

இலங்கை மின்சாரசபை இன்றைய தினம் 7 மணிநேரம் மின்வெட்டுக்கு அனுமதி வழங்கக்கோரிய கோரிக் கையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித் துள்ளது.

பகலில் 5 மணி நேரத்துக் கும், இரவில் இரு மணி நேர மும் மின்வெட்டை நடை முறைப்படுத்த இலங்கை மின் சார சபை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியிருந்தது.

இதற்கு அனுமதி மறுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பகலில் 3 முதல் 4 மணி நேரத்துக்கும், இரவில் 1 முதல் 2 மணி நேரத்துக்கும் மட்டுமே மின்வெட்டை நடைமுறைப்படுத்த அனும தித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

எது எப்படியிருப்பினும் இன்றைய தினம் 5 முதல் 6 மணி நேர மின்வெட்டு நடைமுறை யாகும் என்று முன்னதாகக் கிடைத்த தகவல்கள் தெரி வித்தன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
04.04.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இனவாதம் சாதித்தது?

நாடு ஒருவிதமான பதற்றநிலையை அடைந்திருக்கின்றது. சிங்கள மக்கள் அணிதிரட்டப்படலாம் என்னும் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. நாடு பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து, இவ்வாறானதொரு நிலைமை பலராலும் ஊகிக்கப்பட்டிருந்தது. உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரப்பட்டிருந்தது. ஆனால், அரசாங்கம் அதற்கு செவிசாய்க்கவில்லை. யுத்தத்தை எதிர்கொண்டது போன்று, பொருளாதார நிலைமைகளையும் சமாளிக்கலாம் என்றவாறு அதீத நம்பிக்கையைக் கொண்டிருந்தது. ஆனால், தற்போது நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன.

இந்த நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல வேண்டுமென்னும் நோக்கில் - எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் செயல்படவில்லை. 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தின்போது, நாட்டின் அனைத்து பிரச்னைகளுக்கும் விடுதலைப் புலிகள்தான் காரணம் என்றவாறான பிரசாரம் ஒன்றையே அனைத்து அரசாங்கங்களும் முன்னெடுத்து வந்தன. சர்வதேச சமூகத்தின் மத்தியில் - இலங்கை பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு நாடென்னும் விம்பத்தையே கட்டியெழுப்பியிருந்தனர்.

சர்வதேசத்தின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியும் பெற முடிந்தது. ஆனால், யுத்தம் முடிவுற்று பன்னிரெண்டு வருடங்களாகிவிட்டன. இந்தக் காலத்திலாவது நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்னையை தீர்த்து, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல சிங்கள ஆளும் வர்க்கம் முயற்சிக்கவில்லை. அதற்கு மாறாக பழைய இனவாதத்தை விதைத்து, தங்களின் அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே அனைவரும் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இன்றும் இனப்பிரச்னையை தீர்த்து, தமிழ் மக்களையும் இந்த நாட்டின் வளர்ச்சியில் சம பங்காளிகளாக்க வேண்டும் என்பதில், எந்தவொரு முன்னேற்றமும் தென்படவில்லை.

யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து, அப்போதைய ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு போதிய வாய்ப்புக்களும், அதிகாரமும் இருந்தது. ஆனால், அவர் யுத்த வெற்றியை, தேர்தல் முதலீடாக்குவதிலேயே கவனமாக இருந்தார். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் விடயங்களை துணிவுடன் முன்னெடுப்பதற்கான சூழல் மிகவும் சாதகமாக இருந்தது. ஆனால், ரணில் - மைத்திரி அதிகார இழுபறியால், அனைத்தும் வீணானது. அடிப்படையான பிரச்னை, தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க வேண்டுமென்னும் அக்கறையும் ஈடுபாடும், ஆட்சியாளர்களின் ஆழ்மனத்தில் இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகவே விடயங்கள் தோல்வியடைகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் பிரச்னைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. அவர் வெற்றி பெற்றதும், உடனடியாக இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பில் அவர் சிந்தித்து, செயல்பட்டிருக்கலாம். ஆனால், அவரோ, தமிழ் மக்களுக்கு பிரச்னை இல்லையென்று நிரூபிப்பதிலேயே கவனம் செலுத்தினார். ஆகக்குறைந்தது, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து, அதனை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் கணிசமான பிரச்னைகளை தீர்த்திருக்கலாம். ஆனால், கடந்த பன்னிரெண்டு வருடங்களில் இதனை செய்திருக்கலாம்.

உண்மையில் சிங்கள இனவாதம் சாதித்தது என்ன? தமிழர்களை ஒடுக்க வேண்டுமென்னும் சிங்கள பெருந்தேசியவாத மனோநிலையால் சிங்கள மக்கள் அடைந்தது என்ன? தமிழ் மக்களுக்கு ஒரு துண்டு நிலத்தைக்கூட தர மறுத்தவர்கள், நாட்டையே அந்நிய சக்திகளுக்கு பங்கு போடும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

# அவசரசகால சட்டம் !

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கை அவசரகால சட்ட நடைமுறைகளுக்கு நன்கு பரிச்சயமான ஒரு நாடாகும். இருந்தபோதிலும் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலவரத்தையும் அதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் ஆவேசமான போக்கை தடுக்கும் விதத்திலும் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.*

*நாட்டு மக்களின் இன்றைய நிலவரம் குறித்த உள்ளக்கிடக்கையை பலமாக வெளிப்படுத்துவதாக கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொழும்பு மிரிஹான பகுதியில் அமைந்துள்ள பிரத்தியேக இல்லத்துக்கு முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் பெருமளவில் அன்று ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்காவிட்டால் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் வீட்டு வளவுக்குள் புகுந்து நிமைமையை மோசமாக்கிவிட்டிருக்க முடியும்.*

*எனவே, கடந்த வியாழக்கிழமை மிரிஹான பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றை கருத்தில் கொண்டே நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஆறு மணி முதல் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி வரை அவசரகாலச் சட்டத்துடன் கூடிய ஊரடங்கு சட்டம் அமுலுக்கு வந்திருந்தது. இருந்தபோதிலும் தற்போது நாட்டின் பாதிப்புற்ற பொருளாதார நிலவரத்தின் தாக்கம் கட்டுமீறியுள்ளது.*

*இதன்காரணமாக நாட்டுமக்கள் பொறுமையிழந்தவர்களாக வீதியிலிறங்க ஆரம்பித்துள்ளனர்.*

*இன்றைய அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் பெரும்பங்கு வகித்த முக்கிய பௌத்த பிக்குமார்களே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை உடனடியாக பதவி விலகுமாறு கோரியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி மக்களை பந்தாடி விட்டுள்ளது. மக்கள் பொறுமையிழந்துள்ளனர். எனவே, நிதியமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவை நாட்டு மக்கள் துரத்தியடிக்கும் முன்னர் ஜனாதிபதி அவரை பதவி நீக்கி நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்று கொழும்பு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இவரோடு சேர்ந்து மெதகொடை அபய திஸ்ஸ தேரர் மற்றும் பெல்லன்வில தம்மரத்ன தேரர் போன்ற முன்னணி பௌத்த குருமார்களும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதவி நீக்கப்பட்டு தற்போதைய நிவபரத்தை கையாளக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்த ஒருவர் நிதியமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர்.*

*இந்த மூன்று பௌத்த பிக்குமார்களும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இன்றைய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வந்த 69 இலட்சம் மக்களும் ஏமாந்து போயுள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புகளெல்லாம் தவிடுபொடியாகியுள்ளது என்று முன்னணி பிக்குமார்கள் மட்டுமல்ல. நாட்டின் புத்திஜீவிகள், வர்த்தக சமூகத்தினர், தொழிலதிபர்கள் ஆகியோரும் நிதி அமைச்சர் மட்டுமல்ல. இன்றைய முழு அரசுமே முற்று முழுதாக மக்களால் நிராகரிக்கப்பட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை கொண்டுள்ளனர்.*

*இதேவேளை, அண்மைக்காலம் வரை இந்தியாவின் முக்கியத்துவத்தை இன்றைய ஆட்சியாளர்கள் மட்டுமல்ல. ஆட்சிக்கு வரும் இலங்கையின் ஆட்சியாளர்கள் பலரும் தகுந்த விதத்தில் உணர்ந்திருக்கவில்லை. ஆனால், என்றுமில்லாதவாறு இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்கள் இந்தியாவை ஓர் ஆபத்பாந்தவனாக நம்பியிருக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர்.*

*நிதி உதவியாக மட்டுமல்ல. எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை தற்போது இந்தியாவிடமிருந்து பெறுவதற்கும் இலங்கை முன்வந்துள்ள நிலையில் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் எரிபொருளுடன் இந்திய கப்பலொன்று இலங்கையை வந்தடைந்துள்ளது. போக்குவரத்து பிரச்னைகளை தீர்க்க மட்டுமல்ல. மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்குவதற்கும் டீசல் அத்தியாவசியமானதாக இருக்கின்றது.*

*இலங்கையை பொறுத்தவரை அரசியல், பொருளாதார ரீதியாக மட்டுமல்ல. பூகோள ரீதியாகவும் இந்தியா இலங்கைக்கு முக்கியத்துவமிக்கதாக இருக்கின்றது. ஏனெனில், வேறொரு நாட்டிடமிருந்து இலங்கை உதவியைப் பெறுவதானால் நீண்டதூர போக்குவரத்து மற்றும் அதனால் ஏற்படும் செலவீனங்கள் காரணமாக உடனடியாக நிவாரண உதவிகள் கிடைக்க முடியாத நிலையே ஏற்படும். ஆனால், இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட நாள் முதல் இந்தியா உதவிவருகின்றது.*

*இலங்கை சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்தும் மீள்வதற்கு உதவிகள் வெளிநாடுகளிலிருந்தும் கிடைத்து வரலாம். ஆனால், இன்றைய பொருளாதார நிலவரம் தொடர்பாக நாட்டு மக்கள் கொண்டுள்ள அசௌகரியங்களை எந்தவொரு நாட்டினாலும் சீர்செய்ய முடியாது. இலங்கையர்கள் நாட்டு நலன் கருதி அராஜகத்தை பெரிதும் கையிலெடுப்பதை தவிர்க்கும் விதத்திலேயே அரசு அவசரகாலச்சட்டத்தை கையிலெடுத்துள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டாம். நிம்மதியான நாள். வெளிநபர்களிடம் குடும்ப ரகசியங்களை சொல்ல வேண்டாம். புதிதாக அறிமுகமாகும் நபர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**இடபம்**
வீட்டில் சுபநிகழ்ச்சி நடைபெறுவதால் மகிழ்ச்சி கூடும். செலவு அதிகரித்தாலும் அது சந்தோஷமும் நிறைவும் தரும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. சேமிப்பு கூடும்.

**மிதுனம்**
இளம் வயதினருக்கு வாழ்வில் முன்னேற வாய்ப்பு வரும். நேற்றைய பிரச்னை இன்று நல்ல முடிவிற்கு வரும். பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் பேசும் போது கவனம் தேவை.

**கடகம்**
குடும்பச்சுமை குறையும். செலவு சற்றே அதிகரிக்கும். பொருளாதாரப் பிரச்னை தீர நண்பர்கள் உங்களுக்கு வழிகாட்டுவர். குடும்பத்தினருடன் கலகலப்பாகப் பேசி மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
குழந்தைகளின் கல்வி விஷயத்திற்காக செலவுகள் சற்றுக்கூடும். உடல் நலனில் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். பணியிடத்தில் கவனமும், விழிப்புணர்வும் அவசியம்

**கன்னி**
பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். பண விஷயத்தில் கவனம் தேவை. நோய்கள் தீரும். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய நற்செய்தி ஒன்று உண்டு.

**துலாம்**
பல நாளாக இருந்து வந்த தொந்தரவு ஒன்று முடிவுக்கு வரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சந்தோஷத்தால் முகப்பொலிவுகூடும். வசீகரத்தன்மை அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு**
நகை போன்றவற்றை கவனமாக வைத்துக் கொள்வது நல்லது. நல்ல செயல் ஒன்றை செய்து மன நிறைவு காண்பீர்கள். குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள்.

**மகரம்**
நண்பர் சந்திப்பு திடீரென்று நிகழ்வதால் உற்சாகம் கூடும். இன்று குடும்ப உறவுகளால் கூடுதல் நன்மை கிடைக்கும். உறவினர் இடையே ஒற்றுமை கூடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்**
உங்களின் நலம் விரும்புவோரைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். வீட்டில் சுபநிகழ்ச்சிக்கான முயற்சிகள் இன்று நடக்கும். புதிய வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள்.

**மீனம்**
வீண் பிரச்னைகள் பற்றி கவலைப்பட வேண்டாம். யாரிடமும் கடுமை காட்ட வேண்டாம். வாக்குவாதத்தை தவிருங்கள். நல்லவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

# தமிழ்நாட்டின் உரிமைக்காகவே நான் புதுடில்லிக்கு சென்றேன்!



## முதல்வர் ஸ்ராலின்

சென்னை, ஏப். 04

தமிழ்நாட்டின் உரிமைக்காகவே டில்லி சென்றதாக முதல்வர் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர், நான் அண்மையில் டுபாய்க்கு சென்றிருந்த நேரத்தில், ஏதோ பல கோடி ரூபாயை எடுத்துக் கொண்டு சென்றதாக முன்னாள் முதல்வர் - இன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எடப்பாடி பழனிசாமி பேசிய செய்திகளையெல்லாம் நாம் பார்த்தோம். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கே எனக்கு முன்னால் பேசியவர்களே அதற்குரிய விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

இதையடுத்து அண்மையில் மூன்று நாட்கள் இந்தியாவின் தலைநகரமான டில்லிக்குப் பயணம் சென்று, நம்முடைய மாநிலத்தின் பிரச்னைகளை எல்லாம் பிரதமரிடத்தில் - அதற்குரிய அமைச்சர்களிடத்தில் அந்தக் கோரிக்கைகளை எல்லாம் எடுத்துவைத்து உரிமைக்குக் குரல் கொடுத்து வந்திருக்கிறோம்.

அதையெல்லாம் மூடி மறைக்க - அதைத் தாங்கிக் கொள்ள முடியாத சிலர் என்ன சொன்னார்கள் என்றால், ஏதோ அச்சத்தின் காரணமாக - பயத்தின் காரணமாக சிக்கலில் சிக்கிக் கொண்டிருக்கிற என்னை அதிலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போனேன் என்று சொல்கிறார்கள்.

ஒன்று மட்டும் உறுதியாக சொல்கிறேன். அங்கு சென்று யாருடைய காலிலும் விழுந்து, இதை எனக்கு செய்து தாருங்கள் என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டின் உரிமைக்காகத் தான் நான் போனேனே தவிர, வேறு அல்ல. ஏனென்றால் நான் சாதாரண ஸ்ராலின் அல்ல - பதவியேற்றபோதே நான் சொன்னேன் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்ராலின்’ என்றுதான் சொல்லியிருக்கிறேன். நான் கலைஞருடைய மகன். என்றைக்கும் தமிழ்நாட்டுக்காக உழைப்பேன் - என்றார். (ஐ)

# பீஸ்ட் பட சிறப்பு காட்சிகளை அரசு இரத்து செய்ய வேண்டும்!

திருநெல்வேலி, ஏப். 04

ரசிகர்களின் வன்முறைகளை தடுக்கும் பொருட்டு பீஸ்ட் திரைப்படத்தின் சிறப்பு காட்சிகளை இலத்து செய்ய வேண்டும் என தமிழக பால் முகவர்கள் நலச் சங்க தலைவர் பொன்னுசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து பொன்னுசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில், “ நடிகர் விஜய் நடித்த பீஸ்ட் திரைப்படத்தின் டிரெய்லர் சனிக்கிழமை வெளியான நிலையில் திருநெல்வேலி ராம் திரையரங்கில் டிரெய்லர் பார்க்க வந்த ரசிகர்கள் திரையரங்க இருக்கைகளை அடித்து உடைத்து துவம்சம் செய்தமை கடும் அதிர்ச்சியளிக்கிறது. பொறுப்பற்ற தன்மையோடு வன்முறை செயலில் ஈடுபட்ட நடிகர் விஜய் ரசிகர்களின் காட்டுமிராண்டித்தனமான செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு திரைக்கு வரவிருக்கும் பீஸ்ட் பட டிரெய்லர் வெளியீட்டின் போதே நடிகர் விஜய்யின் ரசிகர்கள் வன்முறை செயலில் ஈடுபட்டுள்ளதை காணும் போது அந்தப் படம் வெளியாகும் போது தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் என்ன நடக்குமோ.? என்கிற திக்.! திக்..!! திக்...!!! அச்ச உணர்வே மேலோங்குகிறது.

எனவே பீஸ்ட் படத்தின் சிறப்பு காட்சிகளை இரத்துச் செய்ய வேண்டும். அத்துடன், நடிகர் விஜயின் கட்அவுட்களும் அகற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். (ஐ)

# மனித இரத்தத்தில் பிளாஸ்ரிக் கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை!



## பாட்டாளி மக்கள் கட்சி

சென்னை, ஏப். 04

மனித இரத்தத்தில் பிளாஸ்ரிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை தேவை என்று பாமக நிறுவனர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பா. ம. க. நிறுவுநர் இராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

மனித உடலிலும், இரத்தத்திலும் பிளாஸ்ரிக் மென்துகள்கள் இருப்பது ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப் பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. பிளாஸ்ரிக்குகளால் மனித குலத்திற்கே ஆபத்து ஏற்படக்கூடும் என தெரியவந்த பிறகும் இந்த விஷயத்தில் நம்மிடம் விழிப்புணர்வு ஏற்படாதது வருத்தம் அளிக்கிறது.

பிளாஸ்ரிக்கால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கணக்கில் கொண்டு பார்க்கும் போது, இந்த உண்மையை மனித குலத்தின் மீதான சாபமாகவே பார்க்க வேண்டியுள்ளது. உணவு, தண்ணீர், காற்று ஆகியவற்றில் பிளாஸ்ரிக் மென்துகள்கள் கலந்திருக்கின்றன என்றும், நாம் சுவாசிக்கும் போதும், உணவுகளை உட்கொள்ளும் போதும் நமது உடலுக்குள் சென்று உறுப்புகளின் மீது படிவதாகவும், பின்னர் இரத்தத்தில் கலப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். இவை அச்சமூட்டும் தகவல்கள் ஆகும்.

அறிவியலும், நாகரிகமும் வளர, வளர பிளாஸ்ரிக் பொருட்களின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. குடிப்பதற்கான தண்ணீரையும், தேநீர், சாம்பார் உள்ளிட்ட உணவுப் பொருட்களையும் பாத்திரங்களில் வாங்கிச் சென்ற நிலை மாறி இப்போது அனைத்துக்கும் பிளாஸ்ரிக் பைகளே பயன்படுத்தப்படுகின்றன. துணி பைகளுக்கு பதில் பிளாஸ்ரிக் பைகளே இன்று பயன்பாட்டிலுள்ளன.

உலகெங்கும் கடந்த 70 ஆண்டுகளில் 900 கோடி தொன் பிளாஸ்ரிக் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 700 கோடி தொன் குப்பையாக நிலத்திலும் நீரிலும் வீசப்பட்டுள்ளது. மீதமுள்ள பிளாஸ்ரிக் தீயில் எரிக்கப்பட்டு, கொடிய நச்சுக்காற்றாக மாற்றப்பட்டுள்ளது. வெறும் 9 வீதமே மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் ஒழிப்புக்கான திட்டங்களை அரசு உடனடியாக அறிவிப்பது அவசியமாகிறது. (ஐ)

## தீர்ப்பிடாதீர்கள்



இயேசுவின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்வதைக் கண்ட பரிசேயரும் ரூபவ் யூதக்குருக்களும் அவரைக் கேள்வி கேட்டு சிக்க வைக்க முயன்று தோற்றுப் போனார்கள்.

இன்றைய நற்செய்தியிலும் ஒரு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வந்து அவரைச் சோதிக்க கேள்வி கேட்கின்றார்கள். ஏனெனில் விபச்சாரத்தில் ரூடவ்டுபட்டோர் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது சட்டம்.

(லேவி 20:10) விபச்சாரத்தை இயேசுவும் கடுமையாக கண்டித்தார். எவ்வாறு என்றால் “ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப் பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று” (மத் 5:27) பாவத்தில் பிடிபட்ட பெண்ணுக்குத் தீர்ப்பு வேண்டுகின்றனர். அவள்

கொல்லப்பட வேண்டுமென்றால் “பாவிகளின் நண்பர்” என்ற அவரது பெயருக்குப் பாதிப்பு ஏற்படும். அவளை விட்டு விடத் தீர்ப்பிட்டால் மோசேயின் சட்டத்தை மீறிய குற்றம் அவரைச் சாரும். எனவே இயேசு “பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள். அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்” என்ற இயேசு “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் அவள் மேல் கல் எறியட்டும்” என்றார். நாமும் இத் தவக்காலத்தில் பிறர் மீது குற்றம் காணும் முன் நம்மையே சோதித்தறிய வேண்டும். எமது குற்றம் களைய இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

*வடக்கு உட்பட 4 மாகாணங்களில்*

## சகல பாடசாலைகளுக்கும் இன்று முதல் விடுமுறை!



கொழும்பு, ஏப். 04

இன்று திங்கட்கிழமை முதல் முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமேல் மாகாணங்களின் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மாத்திரம் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 18ஆம் திகதி பாடசாலைகள் அடுத்த தவணைக்காக திறக்கப்படும். (ஐ)



*ஊரடங்கு நேரத்தை பயன்படுத்தி*

## டிப்பர் சாரதிகளுக்கு எரிபொருள் கிளிநொச்சியில் அமைதியின்மை!

கிளிநொச்சி, ஏப். 04

**கிளிநொச்சி நகரத்தில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், டிப்பர் வாகன சாரதிகளுக்கு, நேற்று ஞாயிற்றுகிழமை மண்ணெண்ணெய் வழங்கியதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.**

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில், அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணெயை வழங்காது, சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகன சாரதிகளுக்கு வழங்கப்பட்டது.

இதனால், அங்கு கூடிய பொது மக்கள் இது தொடர்பில் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இதையடுத்து சம்பவ சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அத்தியாவசிய சேவைகளை ஒழுங்குபடுத்தும் வகையில் மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், உடனடித் தேவைகளுக்காக பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், எரிபொருள் நிலையங்களில் அவ்வாறு வழங்காது, டிப்பர் வாகன சாரதிகளுக்கு பெரும் தொகையில் எரிபொருளை வழங்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். அத்துடன், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் டிப்பர் வாகனங்களுக்கே மண்ணெண்ணெய் மற்றும் டீசல் அதிகளவு வழங்கப்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

## 12 இந்திய மீனவர்கள் நெடுந்தீவு கடலில் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 04

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டில் 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் ஒரு படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் என்றும் அந்தப் பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அந்தப் படகை பிடித்ததுடன், அதிலிருந்த 12 இந்திய மீனவர்களையும்கைது செய்தனர்எனவும்கடற்படை அறிவித்துள்ளது. (ஐ-3)

## எதிர்த் தரப்புகளின் போராட்டங்கள் அரசுக்கு உற்சாகமூட்டுகின்றனவாம்!

*அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொல்கிறார்!*

யாழ்ப்பாணம், ஏப். 04

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை மன வைராக்கியத்துடன் எதிர்கொள்வதற்கான உற்சாகமூட்டல்களாகவே எதிர்தரப்பினரால் தூண்டி விடப்பட்டுள்ள போராட்டங்கள் அமைந்துள்ளன என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் சில வாரங்களுக்குள் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக நேற்றைய தினம் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

“நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்னைகளுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நீண்ட பல வருடங்களாக எமது நாடு எதிர்கொண்ட பொருளாதார சவால்களின் திரட்சியே இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. கடந்த காலங்களில் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு அவற்றில் வெற்றி பெற்ற எமது அரசாங்கம், தற்போதைய பொருளாதார சவால்களையும் முறியடிப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இவ்வாறான நிலையில், மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தும் எதிரணிகள், மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களை மேற்கொள்வதுடன் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறான போராட்டங்கள் விளையாட்டுக் களங்களில் வீரர்கள் சவால்களை எதிர்கொள்கின்றபோது, ரசிகர்களால் வழங்கப்படுகின் உற்சாகமூட்டல்கள் போன்றே அமைந்துள்ளன. ரசிகர்களின் உற்சாகமூட்டல்கள், விளையாட்டு வீரர்களுக்கு வெற்றியடைய வேண்டும் என்ற வைராக்கியத்தையும் உந்துதலையும் ஏற்படுத்துவது போன்றே, எதிரணிகளால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்கள் எமது அரசாங்கத்திற்கு உந்துதலாக அமைந்திருக்கின்றன. எனவே, மக்கள் சகிப்புத் தன்மையுடனும் நம்பிக்கையுடனும் எதிர்வரும் சில நாட்களை எதிர்கொள்ள வேண்டும்” - என்றார். (ஐ)



## விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கு இனி கழிவு வழங்கத் தேவையில்லை

*கல்வியங்காடு சந்தையில் இணக்கம்*

யாழ்ப்பாணம், ஏப். 04

விவசாயிகள் தமது உற்பத்திகளை வியாபாரிகளுக்கு வழங்கும்போது 10வீத கழிவின்றி கல்வியங்காடு சந்தையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் தமது உற்பத்திகளை சந்தைகளில் வழங்கும்போது 10 வீத கழிவு வழங்கப்படுவதால் நஷ்டம் ஏற்படுவதாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கல்வியங்காடு சந்தைக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விவசாயிகள், வியாபாரிகளுடன் கலந்துரையாடினார். இதன்போது, நல்லூர் பிரதேச சபை தவிசாளர், வருமான வரி பரிசோதகர், கமநல சேவைகள் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இதன்போது, கல்வியங்காடு சந்தையில் இனிவரும் நாட்களில் விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றியும் 10 வீத கழிவுகளின்றியும் விவசாயிகள் தமது உற்பத்திகளை நேரடியாக சந்தை வியாபாரிகளுக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது.

மேலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் நல்லூர் பிரதேச சபை முழுமையான ஒத்துழைப்பு வழங்குமென அதன் தவிசாளர் உறுதியளித் தார். (ஐ)

# ஊரடங்கு அமுலிலிருந்தும் வவுனியாவில் வாள்வெட்டு!

## மூன்று பேர் காயங்களுக்கு இலக்கு

**வவுனியா, ஏப். 04**

**நேற்றுமுன்தினம் மாலை நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையிலிருந்த நேரம் வவுனியா நகரில் மதுபான சாலை ஒன்றின் முன்பாக வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றது. இதில் மூவர் காயமடைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.**

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு அண்மையாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதுபானசாலை மூடப்பட்ட பின்னர் அவ்விடத்தில் நின்ற மூவருக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது ஒருவர் மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த மரம் அறுக்கும் வாள் மூலம் மற்றைய இருவர் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டார்.

இதையடுத்து, காயமடைந்த இருவரும் அவரிடமிருந்து வாளைப் பறித்து அவரை வெட்டியதுடன், கற்களாலும் தாக்கினர். எனினும் அங்கிருந்து தப்பிய நபர் வவுனியா பொலிஸ் நிலையத்துக்குள் தஞ்சம் புகுந்தார்.

இதைத் தொடர்ந்து மற்றைய இரு நபர்களும் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)






# இராயப்பு ஜோசப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தல்!

*மன்னார், ஏப். 04*

மன்னார் மறைமாவட்ட முன்னை நாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு ஆண்டகையின் நினைவு பேருரை மன்னாரில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நேற்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மட்டக்களப்பு திருமலை ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார், மனித உரிமை செயல்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், அருட்தந்தையர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மறைந்த முன்னை நாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மறைந்த மன் னார் மறைமாவட்டத்தின் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் முதலாம் ஆண்டு நினைவு பேருரை நூலை ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வழங்கி வைத்தார். தொடர்ந்து நினைவுப் பேருரைகள் இடம்பெற்றது.

நினைவுப் பேருரையை மனித உரிமை செயல்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (ஐ)



# ஊரடங்குக்கு மத்தியிலும் நீள் வரிசைகளில் மக்கள்!

*மன்னார், ஏப். 04*

நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் இன்று அதிகாலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. சனிக்கிழமை பிற்பகலே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முக்கள் நீண்ட வரிசைகளில் நேற்று காத்திருந்தமையை மன்னாரில் அவதானிக்க முடிந்தது.

ஊரடங்கு உத்தரவுக்குள்ளும் மக்கள் நீண்டநேரம் காத்திருந்து பொருட்களை பெற்றுக் கொண்டனர். அத்துடன், பல அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர்.

மன்னார் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்களில் அதிகளவு மக்கள் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில் வழமை போன்று எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

6 மணியை கடந்த நிலையிலும் மன்னார் நகரப் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வழமை போன்று இயங்கி வந்த நிலையில்,நேற்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மின்தடை ஏற்பட்ட நிலையில் மக்களின் நடமாட்டம் இன்றி காணப்பட்டது. (ஐ)



# வவுனியாவில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்!

*வவுனியா, ஏப். 04*

ஹைஏஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா மன்னார் வீதியில் பட்டானிச்சூர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதி ஓரமாக நின்ற ஹைஏஸ் வாகனம் பிரதான வீதிக்கு ஏற முற்பட்ட சமயத்தில் மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஹைஏஸ் வாகனத்துடன் மோதியது.

இதில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# கிளிநொச்சியில் சிறுபோகம்; மொனராகலையிலிருந்து உரம்!

*கிளிநொச்சி, ஏப். 04*

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெல் செய்கைக்கு தேவையான சேதன உரம், மொனராகலை மாவட்டத்திலிருந்து 600 லொறிகளில் எடுத்து வரப்படவுள்ளன என்று மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

சிறுபோக நெல் செய்கைக்கான முன்னேற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், நிலப் பண்படுத்தலுக்கு தேவையான எரிபொருள் பெற்றுக் கொள்வதில் கால தாமத நிலை காணப்படுகின்றது. இதனால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால், சேதன உரத்தைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட நிலையில், மேற்படி உரம் வரவழைக்கப்படவுள்ளது.

அதேவேளை, இவ்வாறு சேதன உரத்தை ஏற்றி வரும் 600 லொறிகளுக்கும் தலா 250 லீற்றர் டீசல் வீதம் எரிபொருள் வழங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் மாவட்ட செயலக தெரிவித்தது. (ஐ)




# இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அவுஸ்திரேலியாவிலும் போராட்டம்!

மெல்பர்ன், ஏப். 04

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்கள் நேற்றையதினம் பெரும் போராட்டத்தை நடத்தினர்.

மெல்பர்ன் - பெடரேஷன் சதுக்கத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை ஜனாதிபதி மற்றும் அவரின் தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கோஷங்களை எழுப்பியவாறும் பாதைகளைத் தாங்கியவாறும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கோட்டாபயவே வீட்டுக்குச் செல், இலங்கையர்களுடன் நாங் கள் இருக்கிறோம், திருடிய பணத்தை திருப்பிக் கொடு, வடக்கில் ஆக்கிரமித்த காணிகளை விடுவி, இந்த அரசிடம் இருந்து இலங்கையர்களைக் காப்பாற்றுங்கள் என பல கோஷங்கள் இந்தப் போராட்டத்தில் எழுப்பப்பட்டன.

இதேவேளை, பிரிஸ்பேன், சிட்னி, கான்பெரா, அடிலெய்ட் மற்றும் ஹோபார்ட் ஆகிய இடங்களிலும் நேற்று போராட்டங்கள் இடம்பெற்றன.

## திடீர் ஊரடங்கு அறிவிப்பால்

# சாப்பிடுவதற்கு உணவில்லை மகரகமவில் மக்கள் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 04

**திடீர் ஊடரங்கு அறிவிப்பால் சாப்பிட உணவின்றி நிர்க்கதியில் இருக்கிறோம் என்று தெரிவித்து மகரகமவில் வீதிக்கு இறங்கி மக்கள் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இதன்போது அங்கு குவிக்கப்பட்ட பொலிஸாருடன் மக்கள் வாக்கு வாதத்தல் ஈடுபட்டனர்.

திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கால் எங்களால் உணவுப் பொருட்களைப் பெற முடியவில்லை. இன்று கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் உணவைப் பெற நாங்கள் எங்கு செல்வது? என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆவேசமாகக் கேள்வி எழுப்பினர்.

ஏற்கனவே எரிவாயு இல்லை, மண்ணெண்ணெய் இல்லை. உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இந்நிலையில் திடீர் ஊரடங்கால் மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)



# யாழ். - முல்லை. பஸ்மீது கல்வீச்சுத் தாக்குதல்!

## பயணிகள் சிலர் காயம்

கிளிநொச்சி, ஏப். 04

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) பஸ் மீது அடையாளம் தெரியாதோரால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி மாவட்டம் புளியம்பொக்கணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த தாக்குதல் சம்பவத்தால் பஸ்ஸின் பின் பகுதி கண்ணாடி முற்றாக உடைந்து சேதமாகியுள்ளது.

பயணிகள் சிலர் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் ஊடுருவல்?

கொழும்பு, ஏப். 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கம் ஊடுருவப்பட்டுள்ளது. இணைய ஊடுருவிகளே இவ்வாறு ஊடுவினர்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ஊடகப்பிரிவு அல்லது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் இதுவரையில் உத்தியோகபூர்வமாக இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பேச்சாளர் ஒருவரிடம் நாம் வினவியபோது, இது செயற்கையாக (Artificial Traffic Generation) ஏற்பட்ட ஒன்று என்று கூறினார். (ஐ)

# ஆரம்ப பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை!

கொழும்பு, ஏப். 04

நாடு முழுவதும் அனைத்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் இன்று முதல் பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஏப்ரல் 18ஆம் திகதி வரை இந்த விடுமுறை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க தனியார் பாடசாலைகள் மற்றும் கத்தோலிக்க சர்வதேச பாடசாலைகள் அனைத்தும் அடுத்த வாரம் மூடப்படும் என்று கத்தோலிக்க தனியார் பாடசாலைகளின் பொது முகாமையாளர் அருட்தந்தை கெமுனு டயஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஐ. சி. ரி.ஏவின் தலைவர் பதவி விலகல்!

கொழும்பு, ஏப். 04

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவரகத்தின் (ஐ. சி. ரி. ஏ.) தலைவர் ஓசத சேனாநாயக்க பதவி விலகியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மக்கள் எதிரிகள் அல்ல; பாதுகாப்பு அவசியம்!

## குமார் சங்ககார

கொழும்பு, ஏப். 04




“மக்கள் எதிரி அல்ல, அவர்கள் இலங்கை மக்கள். நேரம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது, மக்களும் அவர்களின் எதிர்காலமும் பாதுகாக்கப்பட்ட வேண்டும்”, இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் தனது சமூகவலைத் தளத்தில் இந்தக் கருத்தை பதிவிட்டுள்ளார். (ஐ)

# மக்களின் இயல்பு வாழ்வை பாதுகாக்கவே ஊரடங்கு அமுல்!

## அரசாங்கத்தின் விளக்கம் இது

கொழும்பு, ஏப். 04

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை, பொதுச் சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் கருத்து சுதந்திரம், பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என குறிப்பிடப்பட்டுள்ளது.

பேச்சு சுதந்திரம் , கருத்து சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடி போராட்டம் நடத்தும் உரிமை உள்ளிட்ட பொது மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இரும்புக் கம்பியின் விலை தொன்னுக்கு ரூ. 85,000 உயர்வு

கொழும்பு, ஏப். 04

ஒரு தொன் இரும்பு கம்பியின் விலை மீண்டும் 85,000 ரூபாயால் அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி இரண்டு இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாயாகக் காணப்பட்ட ஒரு தொன் இரும்பு கம்பியின் புதிய விலை மூன்று இலட்சத்து 39ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய முன்னர் 1,040 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 10 மில்லிமீற்றர் கம்பியின் புதிய விலை 1,268 ரூபாயாகும்.

ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 12 மில்லிமீற்றர் கம்பி தற்போது ஆயிரத்து 887 ரூபாய்க்கும் 2 ஆயிரத்து 725 ரூபாவுக்கு விற்கப்பட்ட 16 மில்லிமீற்றர் கம்பி மூவாயிரத்து 200 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. (ஐ)

# இலங்கையில் அவசர நிலை; சமூக ஊடகங்களுக்குத் தடை: இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்குமா?

■ ரஞ்சன் அருண்பிரசாத்



இலங்கையில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியால், ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் தீவிரமாக உருவெடுத்த நிலையில், சனிக்கிழமை (ஏப்ரல் 2ஆம் திகதி) அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இது தவிர, 36 மணி நேர ஊரடங்கு சட்டமும் அமுலில் உள்ளது. இந்நிலையில் சனிக்கிழமை இரவு முதல் இலங்கையில் ஃபேஸ்புக், ருவிட்டர், வாட்ஸ் ஆப், இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ள இந்த சூழ்நிலையில், கடந்த 30ஆம் திகதி இரவு தன்னெழுச்சியாக கூடிய பெருந்திரளானோர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதனால், சுமார் 3 கோடி ரூபாவிற்கும் அதிக சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் மூத்த வழக்கறிஞர் இளையதம்பி தம்பையாவிடம் பி.பி.சி. தமிழ் வினவியது.



இயற்கை அனர்த்தம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் போன்ற நாட்டில் அமைதிக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தினால் சாதாரண சட்டத்தின் ஊடாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என கருதும் போது, அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்படும் என அவர் கூறுகின்றார்.

பாதுகாப்பு விடயங்கள், பொருளாதார விடயங்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்ற காரணிகளினால் அரசாங்கத்திற்கு சாதாரண சட்டங்களின் ஊடாக அதனை சமாளிக்க முடியாத நிலைமை வரும் போது, மேலதிகமான அடக்குமுறை சட்டமே, இந்த அவசரகால சட்டம் என அவர் குறிப்பிடுகின்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு என்ற பெயரில்...

"பொதுமக்கள் பாதுகாப்பு என்ற பெயரில், அரசை பாதுகாப்பதற்கான சட்டமே இந்த அவசரகால சட்டம். இது இலங்கையில மட்டும் இல்ல. எல்லா நாடுகளிலேயும் இருக்கும். இந்தியாவை எடுத்துக்கொண்டால், 70ஆம் ஆண்டு காலத்தில் அவசர கால சட்டம் இருந்தது. இலங்கையிலும் 70ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்தது. 60களிலும் இருந்தது. 50களிலும் இருந்தது. 2012ஆம் ஆண்டு வரை இருந்தது.

பிரதானமாக சாதாரண சட்டத்தை கொண்டு நாட்டு மக்களை அமைதியாக வைத்திருக்க முடியாத ஒரு சூழ்நிலையில் தான் இந்த அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துவது என்பது என்னுடைய பார்வை. ஆனால் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியாத சூழ்நிலை வரும் நேரத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்திற்கு கீழ அவசர கால சட்டத்தை பிரகடனப்படுத்துவதாக அரச தரப்பு அல்லது ஆளும் தரப்பினர் சொல்வார்கள். அவசர கால சட்டத்தை பிரகடனப்படுத்துவது என்பது, சாதாரண சட்டத்தில் நாட்டை ஆள முடியாத ஒரு சூழ்நிலையில் நடக்கிறது," என அவர் கூறுகின்றார்.

இது பாரதூரமான சட்டமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு, அது பாரதூரமான சட்டம் என பதிலளித்தார்.

மக்களுடைய உரிமையை மறுக்கின்ற சட்டம் எனவும் அவர் விளக்கமளித்தார்.

ஒருவர் மீது நியாயமான சந்தேகம் ஏற்படுமானால், அவரை கைது செய்ய முடியும் என்ற சரத்து இந்த சட்டத்தில் உள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

யாருடைய சந்தேகத்தில் கைது செய்வது?

"நியாயமான சந்தேகத்தை யார் உருவாக்குவது என்றால், பொலிஸ் அதிகாரிகள்தான். அவர்களுக்கு தகவல் கிடைத்ததன் அடிப்படையில் போனதாக கூறுவார்கள். தகவல் சரியா பிழையா என்று விசாரிப்பது உடனே நடக்காது. ஆகவே இது சாதாரண நிலைமையை விட பாரதூரமான வாழ்க்கையில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தும்" என இளையதம்பி தம்பையா தெரிவிக்கின்றார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் அடிப்படையில், அரசியலமைப்பின் ஏற்பாட்டின் அடிப்படையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்ற ஒரு சட்ட ஆயுதம் தான் அவசரகால சட்டம் என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த ஆயுதத்தையே ஆளும் தரப்பு தற்போது கையில் எடுத்துள்ளதாக மூத்த வழக்கறிஞர் இளையதம்பி தம்பையா தெரிவிக்கின்றார்.

இலங்கையில் இதற்கு முன்னர் அவசரகால சட்டம் அமலில் இருந்த காலக்கட்டத்தில் காணாமல் போனோர் விவகாரத்திற்கு யார் பொறுப்பு என்பது இன்று வரை நிரூபிக்கப்படவில்லை என அவர் கூறுகின்றார்.

அவசரகால சட்டம் என்பது அரச பயங்கரவாதத்திற்கு இடமளிப்பதாக இருக்கும் என கூறும் அவர், அரசாங்கத்தின் பெயரில் வேறு சக்திகள் கூட இயங்குவதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக தெரிவிக்கிறார்.

எவ்வாறான சக்திகள் இயங்கினாலும், அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் என அவர் கூறுகிறார்.

இந்த அவசரகால சட்டத்தின் ஊடாக நன்மைகள் ஏதேனும் காணப்படுகின்றனவா என வழக்கறிஞரிடம், பிபிசி தமிழ் கேள்வி எழுப்பியது.

"என்னை பொறுத்தவரை அவசரகால சட்டம் நன்மை பயக்கும் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால், எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையிலும் கூட சாதாரண சட்டங்கள் போதுமானவை. அடக்கு முறை கூட கூடத்தான், புதுசட்டங்களும், சாதாரண சட்டங்களை விட விசேட சட்டங்களும் தேவைப்படும். பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தில் ஒரு கிழமைக்கு முன்புதான் திருத்தம் கொண்டு வரப்பட்டது. திருத்தம் கொண்டு வந்து, அது போதாமல் இந்த அவசரகால சட்டத்தை கொண்டு வருவது என்பது, திருத்தம் செய்ததும் போதாது என்பதைத்தான் காட்டுகின்றது" என அவர் கூறுகின்றார்.



இலங்கையில் மிக முக்கியமான அனைத்து இடங்களிலும் ராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மிக முக்கிய நிறுவனங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் ஆயுதம் ஏந்திய ராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளதுடன், மிக முக்கிய பொறுப்புகளுக்கு ராணுவ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், இலங்கையில் ராணுவ ஆட்சி கொண்டு வரப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாக பலரும் கூறி வருகின்ற நிலையிலேயே, அவசரகால சட்டம் அமல்படுத்தப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை ராணுவ வீரராக கடமையாற்றிய ஒருவர் என்ற பின்னணியில், இலங்கையில் ராணுவ ஆட்சிக்கு இடம் உள்ளது என்ற ஒரு எண்ணம் மக்கள் மத்தியில் இருந்து வருகிறது.

இந்த நிலையில், இலங்கையில் ராணுவ ஆட்சி ஒன்று கொண்டு வர சாத்தியம் உள்ளதா என பிபிசி தமிழ் கேள்வி எழுப்பியது.

ராணுவ உடையில் வந்தால்தான் ராணுவ ஆட்சியா?

"இது இலங்கைக்கு புது விஷயம் அல்ல. ராணுவ பாதை மறிப்புக்கள், பாதை சோதனைகள் என அவசரகால நிலைமைகளில் இல்லை. சாதாரண சூழ்நிலையில் கூட இருந்துட்டு இருக்கு. இலங்கையில் சட்ட ரீதியாக இல்லாவிட்டாலும், நடைமுறையில பல திணைக்களங்கள் போன்ற விடயங்களில் தலைவர்களாக இருக்கிறார்கள். தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கூடுதலாக இடமளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இந்த கொரோனா காலத்தில். அவர்கள் இலங்கையின் நிர்வாகத்தில் பிரிக்க முடியாத பங்காக வந்து விட்டார்கள்.

அரசாங்கம் அதற்குரிய ஏற்பாட்டை செய்துகொடுக்கிறது. சிவில் நிர்வாகத்தையும், ராணுவ நிர்வாகத்தையும் ஒன்றாக்கி விட்டார்கள். ஆகவே இராணு வத் தலைமை ஒன்று வந்ததால மட்டும் இராணுவ ஆட்சி வருமா? அல்லது வராமல் இருப்பதால் ராணுவ ஆட்சி இல்லையா? என நாம் பழைய வரைவிலக்கணங்களை வைத்துப் பார்க்கக் கூடாது. ராணுவ உடுப்போட ஒரு நாட்டுடு தலைவர் வந்து, நான்தான் தலைவர் என்று சொல்வது என்ற ஒரு சூழ்நிலை வந்தால் தான் ராணுவ ஆட்சி. இல்லை என்றால் ராணுவ ஆட்சி இல்லை என்று நாம் பார்க்க முடியாது. ஆனால் ராணுவ செயற்பாடுகள் கூடும்போது, ஜனநாயக ஆட்சி அல்லது சிவில் ஆட்சியில் குறைபாடு ஏற்படுகிறது. இதன்படி, இந்த அவசரகால சட்டத்தில் அவர்களுக்கு மேலும் இடமளிக்கப்படும்" என இளையதம்பி தம்பையா தெரிவிக்கின்றார் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்றைய தினம் அவசர கால சட்டத்தை அமல்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

(பி.பி.சி.)

# இலங்கை நெருக்கடி:
## ‘உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்கிறோம்’
## கண்ணீர் சிந்தும் மீனவர்கள்



■ யூ.எல். மப்றூக்

டீசல் கிடைக்காமை காரணமாக சில வாரங்களுக்கு முன்னர் 15 நாட்கள் தொடர்ச்சியாக தொழிலுக்குச் செல்ல முடியாமல் போய்விட்டது என்கிறார் அம்பாறை மாவட்டம் சாய்ந்த மருதைச் சேர்ந்த அப்துல் றஹீம். இவர் - பலநாட்கள் கடலில் பயணித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பெரிய படகு ஒன்றில் பணியாற்றுகின்றார்.

இப்போதும் மூன்றாயிரம் ரூபாவுக்கு மட்டுமே ஒவ்வொருவருக்கும் டீசல் வழங்கப்படுவதாகவும், அதனால் தங்கள் படகுக்குத் தேவையான டீசலை நான்கு, ஐந்து பேரை தனித்தனியாக அனுப்பி கொள்வனவு செய்வதாகவும் அவர் கூறுகின்றார்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள்களுக் கான விலைகள் சடுதியாக அதிகரிக்கப் பட்டமை காரணமாக, கடற்றொழி லாளர்களும் கடுமையான கஷ்டங்களை தமது தொழில் நடவடிக்கைகளில் எதிர்கொண்டு வருகின்றனர் என, அப் துல் றஹீம் தெரிவிக்கின்றார்.

கடற்றொழிலில் ஈடுபடும் படகுகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட தோணிகளுக்கு எரிபொருட்கள் தேவைப்படுகின்றன. பலநாட்கள் கட லில் பயணிக்கும் பெரிய படகுகளுக்கு டீசலும், ஒருநாள் தொழிலில் ஈடுபடும் சிறிய படகுகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட தோணிகளுக்கு மண்ணெண்ணெயும் பயன்படுத்தப்படு கின்றன.

கடந்த வருடம் நடுப்பகுதியில் 111 ரூபாவாக இருந்த ஒரு லீட்டர் டீசல் தற்போது 176 ரூபாவுக்கு விற்கப்படுகி றது. அப்போது 77 ரூபாவாக இருந்த ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் விலை - இப்போது 87 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளது. இதனால், கடற்றொழிலுக்கான செலவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

சுமார் 15 நாட்கள் கடலில் பயணித்து மீன்பிடியில் ஈடுபடும் பெரிய படகு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 420 லீட்டர் டீசல் தேவைப்படும் என்கிறார் அப்துல் றஹீம். ஒரு நாள் தொழிலில் ஈடுபடும் சிறிய படகு ஒன்றுக்கு சுமார் 35 லீட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படும் எனவும் அவர் கூறுகிறார்.

எரிபொருள்களுக்கு விலை அதிகரித் துள்ள போதிலும், அவற்றுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மீன்பிடி தொழிலில் பயன்படுத்தப்படும் கலங் களில் மொத்தம் 06 வகை உள்ளதாக, கடற்றொழில் நீரியல் வள திணைக் களத்தின் கல்முனையில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டக் காரியாலயம் தெரிவிக்கின்றது. அவற்றில் 04 வகை யானவை - இயந்திரங்கள் பொருத் தப்பட்ட படகுகள் மற்றும் தோணிக ளாகும். இவற்றுக்கே எரிபொருள்கள் தேவையாக உள்ளன. அம்பாறை மாவட் டத்தில் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகள் மற்றும் தோணிகள் மொத்த மாக 1484 உள்ளன.

மோட்டார் இயந்திரங்கள் பொருத் தப்படாத, துடுப்புகளால் ஒட்டப்படும் 172 கரைவலைத் தோணிகளும் இம் மாவட்டத்தில் உள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் செயல் பாட்டிலுள்ள மீனவர்கள் 14,424 பேர் உள்ளனர். கடற்றொழில் சார்ந்த தொழில்களை மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை 65,344 ஆகும். இந்த மாவட்டத்தின் மொத்த மீனவர் குடும் பங்களின் எண்ணிக்கை 13,500 என கணக்கிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள்களுக் கான விலையேற்றம் காரணமாக கடற் றொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் நேரடியாகப் பாதிக்கப்பட் டுள்ளார்கள்.

மறுபுறமாக, மீன் விலைகளும் தாறு மாறாக அதிகரித்துள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### தொழிலில் அதிக செலவு

கீரி“ மீன் முன்னெரெல்லாம் அதிகபட்சமாக ஒரு கிலோ 400 அல்லது 500 ரூபாவுக்கு மேல் விற்பனையான தில்லை. ஆனால், சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தில் சில பிரதேசங்களில் அமைந்துள்ள சில்லறைச் சந்தைகளில் 1300 ரூபாவுக்கு ஒரு கிலோ கீரி மீன் விற்கப்பட்டது. இப்படி அனைத்து வகை மீன்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன.

கடல் மீன்களை வாங்கி, மொத்தமாக விற்பனை செய்து வருபவர் சாய்ந்தம ருதைச் சேர்ந்த இஸ்திகார். மீன்களை சாய்ந்தமருதில் இருந்து கொழும்புக்குக் கொண்டு செல்வதற்காக, முன்னர் தனது வாகனத்துக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு டீசல் போதுமானதாக இருந்தது என்கி றார். ஆனால் தற்போது 18 ஆயிரம் ரூபா வுக்கு டீசல் தேவைப்படுவதாக அவர் கூறுகின்றார்.

அதேவேளை, வாகனத்துடன் செல் லும் கூலியாட்களுக்கு சாப்பாட்டுச் செல வாக முன்னர் 02 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாகவும் தற்போது 04 ஆயிரம் ரூபா கொடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த பயணத்துக்காக வாகன சாரதி 4500 ரூபாவை கொடுப்பனவாகப் பெற்று வந்ததாகவும், தற்போது 06 ஆயிரம் ரூபாவை பெறுவதாகவும் இஸ்திகார் தெரிவித்தார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாகவே, இவ்வாறு அதிக தொகையினை அவர்கள் கேட்டுப் பெறுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மற்றொருபுறம், தற்போதைய கால கட்டத்தில் மீன் வியாபாரம் குறை வடைந்துள்ளதாகவும், மக்களிடம் பணம் இல்லாமையே அதற்கான காரணம் எனவும் இஸ்திகார் குறிப்பிட் டார்.

புத்தளம் பிரதேசத்திலிருந்து இறால் வகைகளைக் கொள்வனவு செய்து, அவற் றினை அம்பாறை மாவட்டத்தில் இஸ்தி கார் மொத்தமாக விற்பனை செய்தும் வருகின்றார்.

### எரிபொருள் மானியம் நிறுத்தம்

கடந்த காலத்தில் எரிபொருள்களுக் கான விலைகள் குறைவாக இருந்த போதும், கடற்றொழிலாளர்களுக்கு குறிப்பிட்டளவு எரிபொருளை அரசு இலவசமாக வழங்கி வந்தது.

2012ஆம் ஆண்டு தொடக்கம் 2013 மே மாதம் வரையில் அப்போதைய அரசாங்கம் கடற்றொழியலார்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றினை இலவசமாக வழங்கிய தாக கடற்றொழில் நீரியல் வள திணைக் களத்தின் அம்பாறை மாவட்ட காரியா லம் தெரிவிக்கின்றது.

மாதமொன்றுக்கு அதிகபட்சமாக 30 ஆயிரம் ரூபா பெறுமதியான டீசலும், 18 ஆயிரம் ரூபா பெறுமதியான மண் ணெண்ணையும் இலவசமாக வழங்கப் பட்டன.

ஆனால், 2013ஆம் ஆண்டு மே மாதத் திலிருந்து மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச எரிபொருள்கள் நிறுத்தப்பட்டன. இதனால் கடற்றொ ழிலுக்கான செலவு மீண்டும் அதிக ரித்தது.

இந்த பின்னணியில், தற்போது எரிபொருள்களுக்கான விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளதால், கடற் றொழிலாளர்கள் பெரும் நெருக்கடி யினை எதிர்கொண்டுள்ளனர்.

### அடிமேல் அடி: தொடரும் நெருக்கடி

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமை யினால், ஏற்கனவே அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்கள் பெரும் பிரச் னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் மூடப்பட்ட பின்னர், அம்பாறை மாவட் டத்தில் கடற்றொழில் மூலமாகக் கிடைக்கும் மீன்களின் தொகையும் குறைவடைந்துள்ளன.

உதாரணமாக அம்பாறை மாவட்டத் தில் 2017ஆம் ஆண்டு சுமார் 20,177 மெட்றிக் தொன் மீன்கள் கிடைத்தன. 2018இல் 17806 மெட்றிக் தொன் மீன்கள் பிடிபட்டன. பின்னர் அந்தத் தொகை 2019ஆம் ஆண்டு 10,852 மெட்றிக் தொன்னாக குறைவடைந்தது. இந்த நிலையில் கடந்த வருடம் (2021) சுமார் 8656 தொன் மீன்களே கிடைத்ததாக கட்றொழில் நீரியல் வள திணைக்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆக, கிடைக்கும் மீன்களின் அளவில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்பு மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் கடற்றொழிலாளர்கள் பெரும் நெருக்குவாரங்களைச் சந்தித்து வருகின்றனர்.


சிலவேளை படகுகளில் கடலுக்குச் சென்று, மீன்கள் கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்பும் போது - தாம் நஷ்டத்தினை எதிர்கொள்ள வேண்டியேற்படுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர். இப்போதுள்ள எரிபொருள்களின் விலையில் அந்த நஷ்டம் மிகவும் அதிகமானது என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


“உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு“ மீனவர்கள் கடலுக்குச் செல்வதாக பலரும் கூறுவார்கள். அந்தளவு அபாயங்கள் நிறைந்தது இந்தத் தொழில். ஆனால், இப்போதைய கால கட்டத்தில் - மீனவர்கள் கரை திரும்பிய பிறகும் “உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான்“ வாழ வேண்டி உள்ளது என்கிறார், கல்முனையில் நாம் சந்தித்த கடற்றொழிலாளர் பாறூக்.

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?






1) 2) 3)

39. 3 * 4 ⌗ 3 = 15 இங்கு * ⌗ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ.்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ.்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1
38. 2
39. 1
40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1

**04.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**04.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# சாய்ந்தமருது மூதாட்டி கொலை; சந்தேகநபர் நேற்று கைதானார்!

சாய்ந்தமருது, ஏப். 04

அம்பாறை - சாய்ந்தமருதில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தலைமறைவாக இருந்த சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எ ல். சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் மட்டக்களப்பில் வைத்து சந்தேகநபர் கைது செய்தனர்.

கல்முனையை வசிப்பிடமாகக் கொண்ட 48 வயதான சந்தேகநபர் சாய்ந்தமருது, புதுப்பள்ளி வீதியில் வீடொன்றில் தனியாக வசித்து வந்த 83 வயதுடைய சுலைமான் செய்யது புஹாரி என்னும் மூதாட்டியை கொலை செய்து விட்டு தலைமறைவாகியிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதாட்டியிடம் இருந்த நகைகளை அபகரிக்கும் நோக்கில் இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், தலைமறைவாகி இருந்த சந்தேகநபரை பல நாள்கள் தேடுதலின் பின்னர் சாய்ந்தமருது பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

மட்டக்களப்பு விடுதி ஒன்றில் குடும்பத்துடன் தங்கி வாழ்ந்த நிலையில், விடுதி பணியாளர்களாக நடித்தே பொலிஸ் குழுவினர் சந்தேகநபரை கைதுசெய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# பிரச்னைகளை தீர்க்க வலியுறுத்தி முஸ்லிம் காங்கிரஸ் போராட்டம்!

## சாணக்கியன் எம். பியும் பங்கேற்பு

அக்கரைப்பற்று, ஏப். 04

**நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகளை தீர்க்குமாறு வலியுறுத்தி சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சந்தியில் இருந்து ஆரம்பித்த பேரணி அட்டாளைச்சேனை நகரம் வரை ஊர்வலமாக சென்றது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

இதன்போது, பல்வேறு கோஷங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் விசேட பேச்சாளராகப் பங்கேற்றார். அத்துடன், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமும் உரையாற்றினார்.

இந்த பேரணியில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஐ. எம். மன்சூர், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல். தவம், கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் ,சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் உள்ளிட்ட சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர்கள் பல ரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)




# பாலர் பாடசாலை விடுகை விழா!

அக்கரைப்பற்று, ஏப். 04

அக்கரைப்பற்று ரெயின் றொப்ஸ் பாலர் பாடசாலையின் விடுகை விழா தனியார் விடுதியில் பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எம். ஏ. அஸ்பி தலைமையில் நேற்று இடம் பெற்றது.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. அத்துடன், அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் மற்றும் சிறுவர் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். ஏ. பகுர்தீன் மற்றும் தென் கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியாளர் றமீஸ், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் றாசிக் உள்ளிட்டவர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர். (ஐ)

# முடங்கியது மட்டக்களப்பு

மட்டக்களப்பு, ஏப். 04

ஊரடங்கு உத்தரவு காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் நேற்று முழுமையாக முடங்கியது. இதே நேரம், பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் நேற்றுமுன்தினம் மாலை 6 மணி தொடக்கம் இன்று காலை 6 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால், மட்டக்களப்பு மாவட்டமும் முடங்கியது. எனினும், அத்தியாவசிய சேவையினர், செய்தியாளர்களுக்கு நடமாட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. (ஐ)

# 250 மதுபான போத்தல்களுடன் ஒருவர் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு, ஏப். 04

மட்டக்களப்பு நகரில் சட்டவிரோதமாக ஏறாவூர் குடியிருப்பு பிரதேசத்துக்கு மதுபானங்களை பட்டா ரக வாகனத்தில் விற்பனைக்கு எடுத்துச் சென்ற ஒருவரை 250 கால் போத்தல் மதுபானத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனக்கிழமை மாலை 6.30 மணியளவில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கூறினர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் கோட்டமுனை பாலத்துக்கு அருகில் பட்டா ரக வாகனத்தில் மதுபானங்களை எடுத்துச் சென்ற வாகனத்தை சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

இதன் போது ஒருவரை கைது செய்ததுடன் 250 கால் போத்தல்கள் மதுபானத்தையும், அதை ஏற்றிச் சென்ற வாகனத்தையும் கைப்பற்றினர்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்!




நிந்தவூர், ஏப். 04

அம்பாறை - நிந்தவூர் பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் நிறுவனத்தால் உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அமைப்பின் தலைவர் ஐ.எம். நிஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நிந்தவூர் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 50 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ரீ. எம்.சரீம், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல். பைரூஸ்,அமைப்பின் செயலாளர் .புஹாறு உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# தமிழ் அரசியல்வாதிகள் சுயலாபத்துக்கு பதவிகளை வைத்திருப்பது வேதனையே!

## இரா. சாணக்கியன் எம். பி.

மட்டக்களப்பு, ஏப். 04

தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக பதவியை வைத்துக்கொண்டிருப்பது வேதனையான விடயம் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த அரசாங்கம் மக்களுக்கு செய்யும் மோசமான செயல்பாடுகளை கண்டு ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்களே பதவியை துறக்கும் நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் தமது சுயலாபங்களுக்காக பதவியை வைத்துக்கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஐ)

# பாக். பாராளுமன்று கலைக்கப்பட்டது!



இஸ்லாமாபாத், ஏப். 04

நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வி நிச்சயம் என்ற சூழலில் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்லும் முடிவை இம்ரான் கான் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், இம்ரான் கானின் பரிந்துரையை ஏற்று பாராளுமன்றத்தை கலைத்து பாகிஸ்தான் அதிபர் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான அரசு தான் காரணம் எனக் குற்றம் சாட்டி அவர் மீது எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்தன.

பாகிஸ்தானில் உள்ள 342 எம்.பிக்களில் 172 பேரின் ஆதரவை பெற்றால்தான் பதவியில் நீடிக்க முடியும் என்ற நிலை இம்ரான் கானுக்கு உள்ளது. ஆனால், இம்ரான் கானுக்கு அந்த அளவு ஆதரவு இல்லை. எதிர்க்கட்சிகளுக்கு 177 எம்.பிக்கள் ஆதரவு உள்ளது. இதனால், இம்ரான் கான் ஆட்சி கவிழும் என்றே எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே பாராளுமன்றம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது. அத்துடன், பாராளுமன்றை கலைக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தலைநகர் கீவ் பகுதிகளிலிருந்து ரஷ்யப் படைகள் முற்றாக வாபஸ்

## தெற்கு ஒடெசா துறைமுக நகர் மீது புதிதாகத் தாக்குதல்கள் ஆரம்பம்!!

கீவ், ஏப். 04

**உக்ரைன் தலைநகர் அமைந்துள்ள பிராந்தியம் அடங்கலாக வட பகுதியில் இருந்து ரஷ்யா தனது படைகளை மீள அழைத்துள்ளது.**

**கீவ் புறநகர் பகுதிகளை முற்றுகையிட்டிருந்த படைகள் அங்கிருந்து வெளியேறியதை அடுத்துப் பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். புற நகரத் தெருக்கள் எங்கும் அழிவுண்ட பிரதேசங்களாக காட்சியளிப்பதை அங்குள்ள செய்தியாளர்கள் விரித்துள்ளனர்.**

ரஷ்யப்படைகளின் சேதமடைந்த டாங்கிகளும் வாகனங்களும் வீதிகளில் வரிசையில் கிடக்கின்றன. அங்காங்கே மனித சடலங்களும் தரையில் கிடப்பதை படங்கள் காட்டுகின்றன. பூட்சா என்ற புறநகர வீதி ஒன்றில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் வரிசையில் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யப்படைகள் புரிந்த மிலேச்சத்தனமான படுகொலை அது என உக்ரைன் குற்றம் சுமத்தியுள்ளது. தலைநகர் கீவைக் கைப்பற்றுகின்ற முற்றுகை ரஷ்யப் படைகளுக்குப் பலத்த இழப்புக்களுடன் கூடிய பின்னடைவை ஏற்படுத்தி விட்டுள்ளது என்று போரியல் நிபுணர்கள் கூறுகின்றனர். உக்ரைன் படைகளது "சூட்டுவலு" மேற்குலக நாடுகள் வழங்கிய ஆயுதங்களால் மிக உச்ச அளவில் இருந்தமையே ரஷ்யாவுக்குப் பலத்த இழப்புகளைக் கொடுத்துள்ளது.

வடக்கில் இருந்து திருப்பி அழைத்த தனது படைகளைக் கொண்டு தெற்கிலும் கிழக்கிலும் தாக்குதல்களைத் தீவிரமாக்குவதற்கு மொஸ்கோ முயற்சித்து வருகிறது. போரின் 36 ஆவது நாளான நேற்று (ஞாயிறு) நாட்டின் தென் மேற்கே அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒடெசா துறைமுக நகரம் மீது ரஷ்யா கடும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. அங்குள்ள எரிபொருள் குதங்களை தரை,கடல் வழி மூலமாக ஏவுகணை கொண்டு தாக்கி அழித்து விட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போர் ஒரு புறம் நீடிக்கும் அதேசமயம் துருக்கியின் மத்தியஸ்தத்தோடு நடைபெறும் பேச்சுக்களில் உக்ரைன் முன்வைத்த அமைதி யோசனைகளை மொஸ்கோ பிரதிநிதிகள் "வாய் மூலம்" ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

* நேட்டோவில் உக்ரைன் இணையாது-
* ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையலாம்.
* கட்டம்கட்டமாக ரஷ்யா படைகளைத் திரும்பப் பெறும்-
* கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் உள்ள டொன்பாஸ் பிராந்தியத்துக்குத் தன்னாட்சி-
* கிரீமியா தொடர்பில் உக்ரைன் விலகி இருக்கும் -
* அமெரிக்கா தவிர்ந்த - நேட்டோவில் இல்லாத- ஒரு நாட்டில் ஷெலான்ஸ்கி - புடின் அதிபர்கள் சந்திப்பு-

இந்த யோசனைகளை உள்ளடக்கியதிட்டத்தையே உக்ரைன் முன்வைத்துருந்தது. (அ)

## வேகமெடுக்கும் கோவிட் தொற்று!

# இங்கிலாந்தில் 13 பேரில் ஒருவருக்கு கொரோனா!

லண்டன், ஏப். 04

இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு 13 பேரில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் உள்ளதாக, தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் (ஓ.என்.எஸ்) சமீபத்திய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்த எண்ணிக்கை தற்போது 4.9 மில்லியன் கோவிட் பாதிப்புகளாக உயர்ந்துள்ளது. இது முந்தைய வாரத்தில் 4.3 மில்லியன்களாக இருந்தது.

கடந்த 2020ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் கணக்கெடுப்பு தொடங்கியதில் இருந்து இதுவே மிக அதிக எண்ணிக்கையாக இருப்பதாக (ஓ.என்.எஸ்) அதிகாரிகள் கூறுகின்றனர்.

தொற்றுநோய்களின் எழுச்சியானது பரவக்கூடிய ஒமைக்ரோன் பி.ஏ.2 துணை மாறுபாட்டால் ஓரளவு இயக்கப்படுகிறது.

மார்ச் 26ஆம் திகதியுடன் முடிவடையும் வாரத்தின் புள்ளிவிபரங்கள் சமூகத்தில் வைரஸ்/டன் என்ன நடக்கிறது என்பதற்கான மிகத் துல்லியமான பிரதிபலிப்பைக் கொடுக்கும் என்று கருதப்படுகிறது. (அ)

# மன்னிப்பு கோரினார் பாப்பரசர்!



வத்திக்கான், ஏப். 04

கனடாவில் கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்பட்ட பழங்குடியின குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடியின சிறுவர்களுக்கு இடம்பெற்ற அநீதிகளுக்காக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் மன்னிப்பு கேட்டுள்ளார்.

"பழங்குடியின சிறுவர்களுக்கு இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் நான் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி இருக்கிறேன் என்பதை என் இதயத்தில் இருந்து உங்களுக்கு கூற விரும்புகிறேன். கனடா பேராயர்களுடன் இணைந்து இதற்காக நான் மன்னிப்பு கோருகிறேன்" என வத்திகானில் பொதுமக்கள் மத்தியில் பேசியபோது பாப்பரசர் பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

விரைவில் தான் கனடா செல்ல உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் பல தசாப்தங்களாக நீடித்த குடியிருப்பு பள்ளி முறைமையின் கீழ் கலாசார இனப்படுகொலை இடம்பெற்றதாக 2015 ஆம் ஆண்டில், கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிவித்தது.

1870 முதல் 1990 களுக்கும் இடையில், 150,000 -க்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகள் குடியிருப்புப் பள்ளிகளில் இணைய கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தப் பள்ளிகள் தேவாலயங்களால் நடத்தப்பட்டன. பழங்குடி குழந்தைகளை வெள்ளை கனேடிய சமுதாயத்தில் வலுக்கட்டாயமாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறான பள்ளிகள் செயற்பட்டன.

குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் மொழிகளைப் பேச முடியாது தடை ஏற்படுத்தப்பட்டது. மேலும் இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகள் பலவித மான உடல், உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்தனர்.

கனடாவின் முன்னாள் குடியிருப்பு பள்ளி வளாகங்களில் சுமார் 1,000 வயயான பழங்குடிச் சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இது இந்த விவகாரத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த அநீதிகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் மன்னிப்பு கோர வேண்டும் என்ற கோரிக்கைகள் கனடாவில் வலுவடைந்து வந்தன.

இந்த விவகாரத்தில் போப்பாண்டவர் மன்னிப்புக் கோர வேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)


# ஒமைக்ரோனைவிட வேகமாகப் பரவும் கொரோனா திரிபு பிரிட்டனில் கண்டறிவு

லண்டன், ஏப். 04

ஒமைக்ரோனை விட வேகமாகப் பரவக் கூடிய புதிய வகை கொரோனா உருத் திரிவு வைரஸ் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தகவல் தெரிவித்துள்ளது.

ஒமைக்ரோன் திரிபுகளான பிஏ.1 மற்றும் பிஏ.2 ஆகியவற்றின் பிறழ்வுதான் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள எக்ஸ் இ (variant XE) வகை கொரோனாவாகும்.

ஒரே நேரத்தில் குறிப்பிட்ட நபர் பல்வேறு கொரோனா திரிபுகளால் பாதிக்கப்படும்போது புதிய வகை உருவாகிறது. திரிபுகள் சேர்க்கையின்போது மரபியல்



சார்ந்த கூறுகள் கலந்து புதிய வகை கொரோனா உருவாவதாக பிரிட்டன் நிபுணர்கள் தங்களின் ஆய்வு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒமைக்ரோன் வகையின் துணை திரிபான பிஏ.2-ஐ விட புதிதாக உருவாகியுள்ள எக்ஸ்இ கொரோனா திரிபு 10 விகிதம் அதி வேகமாக பரவலாம் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இருப்பினும், இதுகுறித்து மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி எக்ஸ்இ வகை கொரோனா முதன்முதலாக கண்டுபிடிக்கப்பட்டது. இதுநாள் வரை, 637 பேர் புதிய வகை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என பிரிட்டன் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஒமைக்ரோன் பிஏ.2 துணை திரிபு உலகம் முழுவதும் வேகமாக பரவிவருகிறது. மார்ச் 26ஆம் திகதி வரை, பிரிட்டனில் 49 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி தொடரை வென்றது பாகிஸ்தான்!




லாகூர், ஏப். 04

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட்களால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

வேகப்பந்துவீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சு, அணித் தலைவர் பாபர் அஸாமின் தொடர்ச்சியான 2 ஆவது சதம், இமாம்-உல்-ஹக்கின் அரைச் சதம் என்பன பாகிஸ்தானின் வெற்றியில் பிரதான பங்குவகித்தன.

அவுஸ்திரேலியாவால் நிர்ணயிக்கப்பட்ட 211 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 37.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 214 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

மொத்த எண்ணிக்கை 24 ஓட்டங்களாக இருந்தபோது பக்கார் ஷமான் ஆட்டமிழந்தார்.

ஆனால், அடுத்து இணைந்த இமாம்-உல்-ஹக், பாபர் அஸாம் அபாரமாக ஆடி, பிரிக்கப்படாத 2ஆவது விக்கெட்டில் 190 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தானுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தனர்.

பாபர் அஸாம் 12 பௌண்ட்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களையும் இமாம்-உல்-ஹக் ஆட்டமிழக்காமல் 89 ஓட்டங்களையும் பெற்றனர்.

இவர்கள் இருவரும் நடப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் தலா 2 சதங்கள், ஒரு அரைச் சதம் குவித்திருந்தமை விசேட அம்சமாகும்.

இமாம்-உல்-ஹக் இந்தத் தொடரில் (103, 106, 89 ஆ.இ.,) மொத்தமாக 298 ஓட்டங்களையும் பாபர் அஸாம் (57, 114, 105 ஆ.இ.) மொத்தமாக 276 ஓட்டங்களையும் குவித்தனர்.

முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 41.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது.

ஷஹீன் ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவூப், மொஹமத் வசிம் ஆகியோரின் வேகப்பந்து வீச்சை எதிர்கொள்வதில் அவுஸ்திரேலியாவின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சிரமப்பட்டனர்.

ட்ரவிஸ் ஹெட் (0), அணித் தலைவர் அரோன் பின்ச் (0), மார்னுஸ் லபுஷான் (4) ஆகிய மூவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தபோது அவுஸ்திரேலியாவின் மொத்த ஓட்ட எண்ணிக்கை வெறும் 6ஆக இருந்தது.

இவர்களைத் தொடர்ந்து மார்க்ஸ் ஸ்றொய்னிஸ் (19), பென் மெக்டர்மட் (36) ஆகியோரும் ஆட்டமிழக்க (67 - 5 விக்.) அவுஸ்திரேலியா மிகமோசமான நிலையை அடைந்தது.

இந் நிலையில் இணைந்த அலெக்ஸ் ஹரி (56), கமரூன் கிறீன் (34) ஆகிய இருவரும் 6ஆவது விக்கெட்டில் 81 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 148 ஓட்டங்களாக உயர்த்தினர்.

எனினும், மீண்டும் விக்கெட்கள் சரிய அவுஸ்திரேலியா 200 ஓட்டங்களை எட்டுமா என்ற சந்தேகம் எழுந்தது.

எவ்வாறாயினும் கடைசி விக்கெட்டில் ஓட்டமே பெறாத அடம் ஷம்பாவுடன் 44 ஓட்டங்களைப் பகிர்ந்த சோன் அபொட், அணி 200 ஓட்டங்களைக் கடக்க உதவினார்.

சோன் அபொட் 49 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் ஹரிஸ் ரவூப் 3 விக்கெட்களையும் மொஹமத் வசிம் 3 விக்கெட்களையும் ஷஹீன் ஷா அப்ரிடி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

### மகளிர் உலகக் கிண்ணம்:

## ஏழாவது தடவையாகவும் அவுஸ்திரேலியா சம்பியன்




வெலிங்டன், ஏப். 04

மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரின் சம்பியன் பட்டத்தை ஏழாவது முறையாகக் கைப்பற்றியது அவுஸ்திரேலிய அணி.

இங்கிலாந்து அணியை 71 ஓட்டங்களால் வீழ்த்தியதன் மூலமே அவுஸ்திரேலிய மகளிர் இந்த சாதனையைப் படைத்துள்ளது.

இரு அணிகளும் நேற்று மோதிய இறுதிப் போட்டியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 356 ஓட்டங்கள் எடுத்தது.

357 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து தொடக்கம் முதலே விக்கெட்களை இழக்கத் தொடங்கியது. நடாலியா சிவர் மட்டும் மறுமுனையில் நம்பிக்கையை கொடுத்தார்.

213 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து இங்கிலாந்து திணறிய நிலையில், 98 ஓட்டங்கள் சிவருடன் டீன் இணைந்தார்.

சிவரும் 90ஆவது பந்தில் சதத்தை எடுக்க, இலக்கை நோக்கி துரிதமாக நகரத் தொடங்கியது இங்கிலாந்து. டீனும் சிறப்பாக ஒத்துழைப்பு அளிக்க தேவையான அளவுக்கு இங்கிலாந்துக்கு பௌண்ட்ரிகள் கிடைத்தன. 9ஆவது விக்கெட்டுக்கு 50 ஓட்டங்களைத் தாண்டி விளையாடியதால், இந்த இணை அவுஸ்திரேலியாவுக்கு அச்சுறுத்தலாகத் தென்பட்டது.

ஆனால், 9-வது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், டீன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கடைசி விக்கெட்டாக களமிறங்கிய அன்யா ஷ்ரப்சோல் 4 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு ஆட்டமிழந்தார். 43.4 ஓவர்களில் இங்கிலாந்து 285 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தனிநபராக போராடி வந்த சிவர் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 148 ஓட்டங்கள் எடுத்தார். இதற்கு அடுத்த அதிகபட்ச ஓட்டமாக 27 காணப்பட்டது.

இதன்மூலம், 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 7ஆவது முறையாக மகளிர் உலகக் கிண்ணத்தை வென்றது.

## மும்பையை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்!

மும்பை, ஏப். 04

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 23 ஓட்டங்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றிபெற்றது.

இதனமூலம், ராஜஸ்தான சந்தித்த இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளதுடன், மும்பை இந்தியன்ஸ் அணி தோல்வியைத் தழுவியுள்ளது.

ஜோஸ் பட்லர் குவித்த சதம், யுஸ்வேந்த்ர சஹாலின் சிறப்பான பந்துவீச்சு என்பன ராஜஸ்தான் றோயல்ஸை வெற்றிபெறச் செய்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 198 ஓட்டங்களைக் குவித்தது.

யஷஸ்வி ஜய்வால் (1), தேவ்தத் படிக்கல் (7) என சொற்ப ஓட்டங்களுடன் வீழ்ந்த போதிலும் ஜோஸ் பட்லரும் அணித் தலைவர் சஞ்சு சாம்சனும் 3ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 82 ஓட்டங்கள் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்குக் கைகொடுத்தன.

இந்த வருட ஐ. பி. எல். தொடரில் ஜோஸ் பட்லர் முதலாவது சதத்தை குவித்து அசத்தினார். 68 பந்துகளை எதிர்கொண்ட அவர், 11 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் சரியாக 100 ஓட்டங்களை குவித்தார்.

சஞ்சு சாம்சன் 30 ஓட்டங்களைப் பெற்றதுடன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷிம்ரன் ஹெட்மேயர் 14 பந்துகளில் 3 பௌண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 35 ஓட்டங்களை விளாசினார்.

மும்பையின் பந்துவீச்சில் ஜஸ்ப்ரிட் பும்ரா, மில்ஸ் 35 ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

199 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

அணித் தலைவர் ரோஹித் சர்மா (10), அன்மோல்ப்ரீத் சிங் (5) ஆகிய இருவரும் விரைவாக ஆட்டமிழந்தனர்.

ஆனால், இஷான் கிஷன், திலக் வர்மா ஆகிய இருவரும் அரைச் சதங்கள் அடித்து அணிக்கு நம்பிக்கை கொடுத்தனர். ஆனால், அந்த நம்பிக்கை நீடிக்கவில்லை.

இஷான் கிஷன் 54 ஓட்டங்களுடனும் திலக் வர்மா 61 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அவர்களுக்கு அடுத்ததாக கிரன் பொலார்ட் 22 ஓட்டங்களை அதிகப்பட்சமாக பெற்றார்.

பந்துவீச்சில் யுஸ்வேந்த்ர சஹால், நவ்தீப் சைனி ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்; குஜராத்திடம் வீழ்ந்தது டில்லி!

பரபரப்பான போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 14 ஓட்டங்களால் வீழ்த்தியது குஜராத் டைட்டன்ஸ் அணி.

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் தொடர் தற்போது இந்தியாவில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் புனேயில் நடந்த போட்டியில் குஜராத் டைட்டன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

ஷுப்மன் கில் குவித்த அபார அரைச் சதமும் பெர்குசன் கைப்பற்றிய 4 விக்கெட்கள் பெறுதியும் அறிமுக அணியான குஜராத்துக்கு இரண்டாவது வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் ஷுப்மன் கில் அபாரமாக துடுப்பெடுத்தாடி 46 பந்துகளை எதிர்கொண்டு 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 84 ஓட்டங்களைக் குவித்தார்.

அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா 31 ஓட்டங்களைப் பெற்றார். இவர்கள் இருவரும் 3ஆவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்த 65 ஓட்டங்களே குஜராத் இனிங்ஸில் சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது.

ஏனைய துடுப்பாட்ட வீரர்களில் டேவிட் மில்லர் 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் பந்துவீச்சில் முஸ்தாபிஸூர் ரஹ்மான் 3 விக்கெட்களையும் கலீல் அஹ்மத் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. ஆரம்பம் முதலே அதிரடி யாக ஆட முனைந்ததால் அந்த அணி வேகமாக விக்கெட்களை இழந்தது.

5ஆவது, 15ஆவது ஓவர்களை வீசிய பெர்குஷன் இரு ஓவர்களிலும் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

அணித் தலைவர் ரிஷப் பந்த் (43), லலித் யாதவ் (25) ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 61 ஓட்டங்களை பகிர்ந்திராவிட்டால் டில்லி படுமோசமாக தோற்றிருக்கும்.

இவர்கள் தவிர, ரோவ்மன் பவல் மாத்திரமே 20 ஓட்டங்களை எட்டினார். குஜராத்தின் பந்துவீச்சில் லொக்கி பெர்குஷன் 4 விக்கெட்களையும் மொஹமத் ஷமி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# சமூக ஊடக செயல்பாட்டாளர் பிணையில் விடுவிக்கப்பட்டார்

கண்டி, ஏப். 04

வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட சமூக ஊடக செயல்பாட்டாளரும், பல்கலைக்கழக மாணவருமான திஸர அனுருத்த பண்டார பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபரை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திஸர அனுருத்த பண்டார முகத்துவார பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணை பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

தண்டனை சட்ட கோவையின் 120ஆம் இலக்க பிரிவின் கீழ் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். அரசாங்கத்துக்கு எதிராக சூழ்ச்சி விளைவித்தமைக்காக அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊரடங்கு உத்தரவு மீறல் 664 பேர் நேற்று கைதாகினர்!

கொழும்பு, ஏப். 04

ஊரடங்கு உத்தரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 664 பேர் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணி வரையான 12 மணி நேரத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நெருக்கடிகளை தீர்க்குமாறு கோரி பொதுமக்கள் பலரும் வீதிகளுக்கு இறங்கியுள்ளனர். அதிகரித்து வரும் போராட்டங்களை அடக்க நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஊரடங்கு உத்தரவு நேரத்தில் நடமாடினர், பொது இடங்களில் கூடினர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப்ரல் 04

அம்பாந்தோட்டை தங்கல்லை - நேடொல்பிட்டி - வெலிஆரை பிரதேசத்தில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

தோட்டக் காணி ஒன்றிலிருந்தே இந்த சடலம் மீட்கப்பட்டது. கோச்சியாய வீதி, பேரகம பிரதேசத்தை சேர்ந்த 38 வயது நபரே சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# இராணுவ ஆட்சிக்கு வித்திடாமலிருக்கவே நிழல் அரசை அமைக்க அழைக்கிறோம்!

## வாசுதேவ நாணயக்கார விளக்கம்

கொழும்பு, ஏப். 04

**அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் ஜனநாயக போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக்கூடாது என்பதற்காகவே அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை கோருகிறோம். மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பது நடைமுறை தீர்மானங்கள் ஊடாக விளங்குகிறது என்று அரசின் பங்காளிக் கட்சி தலைவர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளி கட்சிகள் “நிழல் அரசாங்கம்” அமைப்பது குறித்து ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் கடுமையாக கிளர்ந்தெழுந்துள்ளது. எனது அரசியல் அனுபவத்தில் தற்போதைய நிலைமையை முன்னொருபோதும் காணவில்லை. அரசின் தலைவருக்கு எதிராக நாட்டு மக்கள் இதற்கு முன்னர் இவ்வாறு வீதிக்கு இறங்கவுமில்லை. பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் வேண்டுமென்றே தீவிரப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தில் முக்கிய பதவியை வகிப்பவர்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தி, நாட்டு மக்களை வீதிக்கிறக்கி தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்



றிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இருந்துகொண்டு செயல்பட்டதன் பெறுபேறு தற்போது மக்கள் போராட்டமாக வெளிப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைக்கு தீர்வு காண அரசாங்கம் எவ்வித தீர்மானங்களையும் செயல்படுத்தவுமில்லை - செயல்படுத்துமாறு பரிந்துரைத்த தீர்மானங்கள் குறித்து அவதானம் செலுத்தவுமில்லை. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் மீண்டும் ஆட்சி மாற்றத்திற்காக வீதிக்கு இறங்கியுள்ளார்கள். ஜனநாயக போராட்டம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனநாயக தன்மையிலான தீர்மானத்தை பெற்றுக்கொடுக்கும் என கருத முடியாது.

தற்போது இராணுவ ஆட்சி நிலவும் நாடுகளில் ஆரம்பகட்ட போராட்டம் ஜனநாயக ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியிலான போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக்கூடாது என்பதற்காகவே இடைக்கால அரசாங்கத்தை கோரியுள்ளோம். மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பதை தற்போதைய தீர்மானங்கள் ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது. நாட்டு மக்கள் தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்யும் வரை இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதே புத்திசாலித்தனமான தீர்மானமாகும். மக்களின் போராட்டம் தீவிரமடைந்தால் அது அரசாங்கத்திற்கும், நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார்.

# ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அடிப்படைவாதம் தூண்டப்படுகிறது

## பின்னணியில் அரசு என்கிறது ஜே. வி. பி.

கொழும்பு, ஏப். 04

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றவாளிகள் அல்ல. எனவே, கைது செய்யப்பட்ட அனைவரும் நிபந்தனைகள் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் அடிப்படைவாதத்தை தூண்டுவதற்கு முயற்சிக்கிறது.

எனினும், இவ்வாறான சூழ்ச்சிகள் இனி வெற்றி பெறாது, என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே. வி. பி. தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும் , அரசாங்கம் சுகபோகங்களை அனுபவிப்பதை நிறுத்தவில்லை. மக்களின் பிரச்னைகள் தொடர்பில் குரல் கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இல்லை. மாறாக மக்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறைகள் ஊடாக முடக்குவதற்கே முயற்சிக்கிறது.



மிரிஹான பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் மாத்திரமின்றி செய்தியாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களை முதலில் பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கு முயற்சித்த அரசாங்கம் , பின்னர் பொது சொத்து பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தது. எவ்வாறிருப்பினும் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான செயல்பாடுகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டாம் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடக்குமுறைகள் ஊடாக மக்களின் குரலை முடக்க முடியாது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் கைது செய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்ல. அவர்கள் எவ்வித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். உண்மையான குற்றவாளிகள் அரசாங்கத்திலேயே இருக்கின்றனர்.

சட்டத்தின் மூலம் மக்களைக் கட்டுப்படுத்த முடியாது. காரணம் சட்டத்துறையும் மக்களுடனேயே இருக்கிறது. மக்களை எதிர்கொள்ள முடியாத அரசாங்கம் அவசரகால நிலைமை சட்டத்தை நடைமுறைப்படுத்தி அவர்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறது. அது மாத்திரமின்றி ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அடிப்படைவாதத்தை தூண்டவும் முயற்சிக்கிறது.

மிரிஹானவில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அரசாங்கத்தை சேர்ந்த சிலர் நுழைந்து , அரசாங்கத்தின் தேவைக்கு ஏற்பவே அங்கு வன்முறையான சூழலை தோற்றுவித்துள்ளனர் என்ற சந்தேகம் நிலவுகிறது. ஆனால், மக்களுக்கு தெரியாமல் எந்தவொரு சதி செயலையும் அரசாங்கத்தினால் செயல்படுத்த முடியாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# கருத்துகளை எதிர்கொள்ள அஞ்சுபவர் தலைமை பதவிக்கு பொருத்தமற்றவர்!

## எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஏப். 04

சமூக ஊடகங்களை தடை செய்ததன் மூலம் உங்கள்மீதும் உங்கள் அரசாங்கத்தின்மீதும் கோபம் மற்றும் வெறுப்பு அலைகளை தடுக்க முடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம் உங்களுக்கு அச்சுறுத்தல் என நீங்கள் கருதினால் நீங்கள் தலைமை தாங்கத்தகுதியற்றவர் எனவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தனது ருவிட்டரில் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சமூக ஊடகங்கள் மூலம் நாடு முழுவதும் அரசுக்கு எதிரான மாபெரும் போராட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒருங்கிணைக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் போராட்டத்தை ஒடுக்கும் வகையில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டு, ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சமூக ஊடகங்களும் நள்ளிரவு முதல் முடக்கப்பட்டுள்ள நிலையிலேயே எதிர்க்கட்சித் தலை வர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

**வியுக்தியார் பதில்கள்**



வாராவாரம் உங்கள் கேள்விகளுக்கு வியுக்தியார் பதிலளிக்கவிருக்கிறார். அது அரசியல், சமூகம், சமயம் என்று எந்த துறையில் உங்களுக்கு சந்தேகம்இருந்தாலும் கேள்விகளை அனுப்புங்கள். வியுக்தியார் தனக்கே உரிய பாணியில் பதில் தருவார்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

வியுக்தியார் பதில்கள்.
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## மஹிந்த பதவி விலகும்...

திபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் இணைய ஊடகங்களில் நேற்று மாலை செய்திகள் வெளியாகின.

பிரதமர் பதவி விலகும் முடிவில் உள்ளார் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவரும் உறுதிப்ப்படுத்தினார் என அந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த செய்திகளை அடுத்து கொழும்பிலும் அரசியல் வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இந்தச் செய்தியின் உண்மைத் தன்மை குறித்து உறுதிப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்களையும் அரசியல் தரப்புகளையும் தொடர்ச்சியாகத் தொடர்பு கொண்ட வண்ணம் இருந்தனர் என்றும் கூறப்பட்டது.

ஆயினும் அந்தச் செய்தியில் உண்மைத் தன்மை இல்லை என பிரதமர் அலுவலகம் சில மணி நேரத்தில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. (அ)

## செய்தியாளர்...

பதற்றநிலை ஏற்பட்டது.

சமகால நிலைமைகள் தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் செய்தியாளர் சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த சந்திப்புக்காக சென்றபோது அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் செய்தியாளர்களை மறித்து அவர்களின் விவரங்களை சேகரித்தனர்.

தொடர்ந்து, ஊடக சந்திப்புக்களை நடத்தமுடியாது என்று கூறிய பொலிஸார் செய்தியாளர்களை கடுமையாக எச்சரித்தனர். இதனிடையே, உதவி பொலிஸ் அத்தியட்சகர் செய்தியாளர்களை கைது செய்து வாகனத்தில் ஏற்றுமாறு உத்தரவிட்டார். இந்த உத்தரவைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டவே பதற்றநிலை உருவானது.

இந்த வேளையில் அந்தப் பகுதியில் மேலும் பொலிஸார் குவிக்கப்பட்டமையால் பதற்றம் மேலும் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பை இரத்துச் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறியதைத் தொடர்ந்து நிலைமை சுமுகமானது. (ஐ-3)

## அனைத்து...

பதவி விலகிய அமைச்சர்கள் நேற்று இரவே தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்க முடிவாகியது எனவும் அரச தகவல்கள் கூறின.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றிரவு நடந்த விசேட கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் மஹிந்த தனது பதவியை இராஜினாமா செய்யக்கூடாதென இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. பிரதமர் தமது பதவியில் நீடிக்கவேண்டுமென அமைச்சர்கள் அனைவரும் கையொப்பமிட்ட கடிதமொன்று இன்று ஜனாதிபதி கோட்டாபயவிடம் கையளிக்கப்படவுள்ளது.

நெருக்கடி நிலைமையை தணிக்கப் பதவி விலக தயாரென இங்கு பிரதமர் மஹிந்த தெரிவித்தபோதும் அமைச்சர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இன்று காலை அனைத்து அமைச்சர்களும் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். அப்போது இந்த கடிதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பிரதமரைத் தவிர ஏனைய அனைத்து அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் பதவி துறந்துள்ளனர் என தினேஷ் குணவர்தன நேற்றிரவு தகவல் வெளியிட்டார்.

நாட்டில் எழுந்துள்ள பெரும் பொருளாதார சிக்கலை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசு முழுமையாகப் பதவி விலகவேண்டும் எனக் கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்தன.

போராட்டங்களை அடக்க அரசு அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்திய போதும் அதனையும் மீறி நாடு முழுக்க நேற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

இதனையடுத்து நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் நேற்றிரவு நடந்த விசேட கூட்டத்தின் பின்னர் முழு அமைச்சர்களும் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாசுதேவ...

ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இந்த அறிவிப்பானது அரசாங்கத்துக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் ஆளும் அரசின் பெரும்பான்மையை இல்லாமல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் இது தொடர்பாக கொழும்பில் உள்ள மூன்று இடங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

தங்களது பெரும்பான்மையை சபாநாயகருக்கு எழுத்து மூலம் காட்டி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவருவதற்கு இந்த குழு எதிர்பார்த்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## சஜித்...

சுதந்திர சதுக்கத்தில் உள்ள டி.எஸ். சேனாநாயக்க நினைவுச் சிலை அருகே ஒன்றுகூட முயன்றனர்.

எனினும் பொலிஸார் தடுப்பு வேலிகளை அமைந்து அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இந்தப் பகுதியில் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுபினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா,சரத் பொன்சேகா, ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், ஏரான் விக்கிரமரத்ன உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (அ)

## பேராதனை...

ஈடுபட்டனர்.

மாணவர்கள் பேராதனை பல்கலைக் கழக வளாகத்திலிருந்து பேராதனை கலஹா சந்திவரை பேரணியாகச் செல்ல முற்பட்டனர்.

அங்கு மாணவர்களைச் செல்லவிடாது தடுப்புக்களை ஏற்படுத்திய பொலிஸார், மாணவர்கள் கட்டுப்பட மறுத்த நிலையில் அவர்கள் மீது தண்ணீர்த் தாரைத் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. (அ)

## இடைக்கால...

மற்றும் பிரத மருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பிலான யோசனையை சமர்ப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுடன், வாசுதேவ நாணயக்கார மற்றும் டிரான் அலஸ் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறினார்.





# அரசின் ஊரடங்கு உத்தரவையும் மீறி பல இடங்களிலும் போராட்டங்கள்!

கொழும்பு, ஏப். 04

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவினையும் மீறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு பொது மக்கள் அதிகளவில் ஒன்று திரண்டு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

கல்கிஸை, இரத்மலானை, கொச்சிக்கடை உள்ளிட்ட பகுதிகளில் இந்த போராட்டங்கள் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்று முன் தினம் மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையான காலப்பகுதியில் நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் பொதுமக்கள் பொது இடங்களில் கூடவும் தடை விதிக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது.

ஆயினும் ஊரடங்கு உத்தரவினையும் மீறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## மஹிந்த பதவி...

வுள்ளார் என்றும் சில மணி நேரங்களில் இந்த அறிவிப்பு வெளியாகலாம் என்றும் நேற்று மாலை குறிப்பிட்டிருந்தது.

அதேவேளை,

அதே ஊடகத்தின் ஆசிரியர் ஒருவர், தனது சமூக வலைத்தளப் பதிவில் பிரதமர், ஜனாதிபதியிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார் என்றும் அதனை ஜனாதிபதி உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் செய்தி தீவிரமாக ஊடகங்களில் பரவியிருந்த நிலையில், பிரதமர் அலுவலகம் குறித்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று தெரிவித்து அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதியின் இல்ல பகுதியில் ஒருவர் உயிரை மாய்த்தார்!

## கொழும்பில் பதற்றம் மேலும் அதிகரிப்பு

**கொழும்பு, ஏப். 04**

**மிரிஹானவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன்பாக நேற்று ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.**

55 வயது ஆண் ஒருவரே இவ்வாறு மரணமானார் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதிக்கு எதிராகப் போராட்டங்கள் வலுத்திருக்கும் நிலையில், நேற்றைய தினம் ஜனாதிபதியின் வீட்டின் முன்பாகவுள்ள மின்மாற்றி உள்ள மின்கம்பத்தில் குறித்த நபர் ஏறியுள்ளார்.

இதன்போது குறித்த நபரை மின்சாரம் தாக்கியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே அவர் உயிரை மாய்த்தார் என்று தகவல்கள் பரவி வருகின்றன.

எனினும், இந்த சம்பவத்தின் போது உயிரிழந்த நபர் மது போதையில் இருந்தாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் பல இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்த மரணம் மேலும் அங்கும் பதற்றத்தையும் தீவிரத்தையும் அதிகரித்துள்ளது. (ஐ)

# ஒளிப்பதற்கு இடம் தேடுங்கள்!

## சரத் பொன்சேகா இப்படி எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 04

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் போது, பலவந்தமாக ஆட்சியை கைப்பற்றி வைத்திருப்பவர்கள் ஒளிந்து கொள்வதற்கு இடத்தை தேடிக் கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பி னர் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், கொழும்பு குறுந்துவத்தை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக எதிர்க் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக உரிமையை முடக்குவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் சாடினார்.

# பல்கலைக்கழக மாணவர்கள் கிளிநொச்சியில் போராட்டம்!



கிளிநொச்சி, ஏப். 04

அரசாங்கத்துக்கு எதிராக யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊரடங்கு உத்தரவு நேற்று அமுலிலிருந்த நேரத்தில் அறிவியல் நகரில் ஏ - 09 நெடுஞ்சாலையில் பல்கலைக்கழக பிரதான பிரதான வீதியில் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வீடு செல்ல வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். (ஐ)

# அவசரகால சட்டத்துக்கு எதிராக வாக்களிக்க முடிவு

## ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. அறிவிப்பு

கொழும்பு, ஏப். 04

அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. இதனை தோற்கடிக்க ஆளும்கட்சியில் இருந்துகொண்டு புரட்சி செய்யும் 11 கட்சிகளும் முன்வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அவசர கால சட்டத்தை பிரகடனப்படுத்தி ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அமுலில் இருக்கும் காலத்தின் பின்னர் அந்த சட்டத்தை நீடிப்பதற்கு ஒரு மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டுவந்து அதை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது தேசிய மக்கள் சக்தியும் இதற்கு எதிராக வாக்களிக்கும் என அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# மக்களின் ஆசியுடனேயே ஆட்சியை கவிழ்ப்போம்!

## சஜித் பிரேமதாஸ



கொழும்பு,ஏப். 04

"ஒப்பந்த அரசியலுக்கு இடமில்லை, மக்கள் ஆசியுடன்தான் ஆட்சியைக் கவிழ்ப்போம்." - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்னெடுக் கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை பெற்று தருகின்றோம், ஆட்சியை முன்னெடுங்கள் என சிலர் இன்று கூறுகின்றனர். எமக்கு 'ஒப்பந்த' அரசில் தேவையில்லை. மக்கள் ஆணைமூலமே நாம் ஆட்சிக்கு வருவோம்.

இந்த நாட்டை மொட்டு கட்சிதான் சீரழித்துள்ளது. இந்த அரச பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் போராடுவோம். எதிர்காலத்திலும் போராட்டங்கள் தொடரும்." - என்றார். (ஐ)

# சமூக ஊடங்களுக்கு தடை; மனித உரிமைகள் மீறலே!

## மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 04

சமூக வலைத்தளங்களை தடை செய்தமையானது மனித உரிமை மீறலாகும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக எவ்வித மதிப்பீடுகளும் செய்யப்படாத நிலையில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டமையும் ஒரு வகை உரிமை மீறல் செயல்பாடு என அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் நேற்று நடைபெற்ற விஷேட கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ஐ)







### ஊரடங்கு உத்தவு நடைமுறை:

# மன்னாரில் இயல்பு வாழ்வு நேற்று முற்றாக முடங்கியது

மன்னார், ஏப். 04

நாட்டில் நேற்று முன்தினம் மாலை 06 மணி முதல் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதேவேளை, மன்னார் நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

ஊரடங்கு நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, ஏனைய சேவைகள் அனைத்தும் மன்னார் மாவட்டத்தில் முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக உணவகங்கள்,வியாபார நிலையங்கள் மூடப்பட்டுள்ள தோடு, அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித மடைந்துள்ள நிலையில் மக்கள் முற்றாக வீடுகளில் முடங்கியுள்ளனர்.

வீதிகள் மற்றும் பொது இடங்களில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் உரிய அனுமதியின்றி வீதிகளில் நடமாடுவார் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். (ஐ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அயன்,நடுவுல
கொஞ்சம் பக்கத்தை காணோம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா - வைத்தியர் பிரபாசங்கர்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்-
நடிகர் சஞ்சீவ்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு